
மதுரையில்

மதுரை காலேஜ் நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஜூலை மீ 28-ம் ௳ சனிக்கிழமை மாலை 7-மணிக்கு

மதுரை சிந்தாமணி டாக்கீஸில்

★

தஞ்சாவூர் டி. டி. சங்கரய்யர்	....	பிடில்
கல்பாத்தி ராமநாதன்	....	மிருதங்கம்
மதராஸ் வேணு நாயக்கர்	....	கஞ்சிரா
ஆலங்குடி ராமச்சந்திரன்	....	கடம்

★

டிக்கெட்டுகள் : ரூ. 250/- 100/- 25/- 10/- & 5/-
மதுரையில் கீழ்க்கண்ட இடங்களில் டிக்கெட்டுகள் கிடைக்கும்.

- சிந்தாமணி டாக்கீஸ், கீழவெளி வீதி
- ராயல் டாக்கீஸ், தெற்கு மாசி வீதி
- காரிக்கார் & ஸூரி, பாலெஸ் ரோடு
- மதுரை காலேஜ் ஆபீஸ்

ஜூன் மீ 29-ம் ௳ நடக்க இருந்த மேற்படி கச்சேரி ஜூலை மீ 28-ம் தேதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ஏழை மாணவர் நிதிக்காக

போர்டு உயர்நிலைப் பள்ளி

பூவிருந்தவல்லியில்

ஞாயிறு 8-7-45 அன்று

இசைக் கச்சேரி

★

சங்கீத வித்வான்

ஸ்ரீ V. V. சடகோபன் - பாட்டு

,, V. கோவிந்தசாமி நாயகர் - பிடில்

,, A. கண்ணன் - மிருதங்கம்

,, வேணு நாயகர் - கஞ்சீரா

கவியரசர் தாகூர் எழுதிய
அற்புத நவீனம்

பூந்தோட்டம்

மொழிபெயர்ப்பு :

த. நா. குமாரஸ்வாமி

"கல்கி"யில் தொடர்ச்சியாக வெளிவந்த கவியரசர் ரவீந்திர நாத் தாகூர் எழுதிய இந்த அழகிய நவீனம் "மணியம்" தீட்டிய கண் கவரும் வர்ணப் — படங்களுடன் கூடியது —

விலை ரூ. 1-8-0
(தபாற்செலவு பிரத்தியேகம்)

★

கல்கி காரியாலயம்

கீழ்ப்பாக்கம் :: மதராஸ்

சரஸ்வதி கான சபா

சிதம்பரம்



9-7-45 அமாவாசையன்று இரவு 10 மணிக்கு

நடராஜ் - சகுந்தலா & பார்ட்டி

அற்புத நடனங்கள்

★

"சாகுந்தலம்" "நிர்வாணம்"
"ஆண்டாள் திருமணம்" "சிவ சக்தி"


முதலியன

உன்னதமான ஜோடனைகள்!
உயர்தர கீதங்கள்!!

R. S. ராமானுஜம், செக்ரடரி.


சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!
LUX
LUX
TOILET SOAP
லீலா தேசாய்
அழகுபடுத்த நான் பல வருஷங்களாகக் கையாண்ட முறை மிக எளிதும், சீக்கிரமானதென்றும் கூறுகிறார் லீலா. லக்ஸ் டாய்லட் சோப்பைச் சரியாக ஒழுங்காய் உபயோகப்படுத்துவதுதான் அது. சருமத்தின்மீது மெதுவாகத் தடவி நன்ருகக்கழுவினல், இந்த அழகான சோப்பின் சிறந்த நுரை சருமத்தைச் சுத்தமாக்குகிறது; பட்டைப்போன்ற ஒரு மினுமினுப்பைக் கொடுக்கிறது; நல்ல வாசனையையும் அளிக்கிறது.
லக்ஸ் டாய்லட் ஸோப்
LEVER BROTHERS (INDIA) LIMITED

நிகழ்ச்சிச் சித்திரம்



உம்மன்


சர்வகலாசாலை
இடமில்லை
கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் கிடைக்காதது சென்னையில் ஒரு பெரிய பிரச்னையாகி விட்டது.
வங்காளப் பஞ்சத்தில் உயிர் துறந்தவர்களின் ஆவிகள் தேர்தல் கூட்டங்களில் அமெரியைப் பிடித்து வதைக்கின்றன. வங்காளப் பஞ்சத்துக்கு அமெரி பொறுப்பல்ல என்று ஸர் ஸ்ரீவத்ஸவா எழுதி யிருக்கும் கடிதத்தைக் கொண்டு அமெரி தம் முகத்தை மறைத்துக் கொள்கிறார்.
ஸ்ரீவத்ஸவா கடிதம்

ஏற்பாடு செய்யப்பட வில்லையே? பிரிந்து போகும் உரிமை இல்லாவிடில் அது ஜனநாயகமா?'' என்று அந்த அபஸ்வரக் குரல் கூறியது.

இப்படியாக, ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு, அறுபது நாள் யோசனை புனராலோசனைகளுக்குப் பிறகு, 1500 மணி நேரம் கமிட்டிகளில் வாதப் பிரதிவாதங்கள் நடந்த பிறகு, எத்தனையோ நெருக்கடிகளைத் தாண்டி, எடுத்த காரியத்தை ஜயம் பெற நிறை வேற்றி விட்டு, உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு நிரந்தர ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விட்டு, கடைசியில் கலைந்தது.

இதிலிருந்து, உலகத்தில் எதற்குமே ஒரு முடிவு உண்டு என்ற உண்மையும் ஸ்தாபிதமாயிற்று.

* * *

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் முடிவாக உருவான திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

1. இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் எதிர்க் கட்சியிலிருந்து யுத்தம் செய்த தேசங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ஐக்ய தேச ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது.

2. வருங்காலத்தில் உலகத்தில் யுத்தம் வராமல் பார்த்துக் கொள்வதும், தேசங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை யுத்தம் ஏற்படாதபடி தீர்த்து வைப்பதும், ஆக்கிரமிப்புச் செய்யும் தேசங்களைக் கண்டித்து அடக்குவதும் மேற்படி ஸ்தாபனத்தின் நோக்கங்கள்.

3. மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 'பாதுகாப்புக் கௌன்ஸில்' என்பதாக ஒரு குட்டிச் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதில் சைனு, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா ஆகிய தேசங்கள் நிரந்தர ஸ்தானம் வகிக்கும். மற்ற தேசங்கள் எல்லாம் சேர்ந்து இரண்டு வருஷத்துக்கொரு முறை ஆறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்.

இந்தப் பாதுகாப்புக் கௌன்ஸிலில் உள்ளவர்கள்தான் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பு வாய்ந்தவர்கள். யுத்தம் நேராமல் தடுப்பதற்காக இவர்கள் ஆயுத பலத்தை உபயோகிக்க உரிமை கொண்டிருப்பார்கள்.

4. உலகத்தில் இன்னும் சுதந்திரம் பெருமலிருக்கும் பிரதேசங்களை அவற்றையாளுவோர் நல்ல முறையில் ஆட்சி புரியவும், சுயாட்சி அல்லது சுதந்திரத்துக்கு அந்தத் தேசங்களைத் தயார் செய்யவும் ''தர்மகர்த்தா முறை'' என்பதாக ஒன்று ஏற்படுத்தப் படுகிறது. இந்த தர்மகர்த்தாப் பொறுப்பு அந்தந்த தேசத்தில் சரிவர நிறைவேற்றப் படுகிறதா என்று பார்த்துக் கொள்ள 'டிரஸ்டிஷிப் கௌன்ஸில்' ஒன்று ஏற்படுத்தப்படும்.

5. இன்னும் உலகத்தில் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பிரச்னைகள், சமூக முன்னேற்றப் பிரச்னைகள், ஜீவ காருண்யப் பிரச்னைகள் முதலியவற்றைத் தீர்த்து வைப்பதற்காகவும், உலகத்தில் பொருளாதார முன்னேற்றம், சமூக சமத்வம் முதலியவைகளை வளர்ப்பதற்காகவும் 'எகனமிக் அண்டு ஸோஷியல் கௌன்ஸில்' என்பதாக ஒன்று ஏற்படுகிறது.

6. உலக விவகாரங்களில் அநீதிகளைப் போக்கி நியாயம் வழங்குவதற்காக 'சர்வ தேசிய நீதி மன்றம்' ஒன்றும் ஸ்தாபிக்கப்படுகிறது.

* * *

மேற்கண்டவிதமான அரிய பெரிய முயற்சிகள் நம்முடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினுல் வெற்றியடைய வில்லை என்ற கெட்ட பெயருக்கு நாம் ஆளாக விரும்பவில்லை.

எனவே, நமது பரிபூரண ஆசிகளையும் மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் இதோ சமர்ப்பிக்கிறோம்.

* * *

இவ்வளவு சொன்ன பிறகு நமது பழைய முடிவான அபிப்பிராயத்தையும் இங்கே ஒரு தடவை ஞாபகப் படுத்தி வைக்கிறோம். உண்மையாகவே உலகத்திலிருந்து யுத்தம் ஒழியவேண்டுமானுல், அதற்குப் பின் வரும் இரண்டு நிபந்தனைகள் நிறைவேற வேண்டும்:—


உலகத்தில் ஒரு தேசத்தார் இன்னொரு தேசத்தாரை ஆளுவது என்பது ஒழிய வேண்டும்.


ஒரு கூட்டத்தார் இன்னொரு கூட்டத்தாரைச் சுரண்டிப் பணம் சேர்ப்பது என்பதும் ஒழிய வேண்டும்.

இவ்விரு தீமைகளும் உலகிலிருந்து அடியோடு ஒழியும் வரையில், யுத்தத்தை ஒழிக்கச் செய்யும் முயற்சி எதுவும் நிரந்தரமான பலன் தராது.

ஒரு பக்கத்தில் இல்லாவிட்டால் இன்னொரு பக்கத்தில், ஒரு ரூபத்தில் இல்லாவிட்டால் இன்னொரு ரூபத்தில், யுத்த ராட்சதன் புனர் ஜன்மம் எடுத்துக்கொண்டுதா னிருப்பான்.

உம்மன்


சர்வகலாசாலை
இடமில்லை
கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் கிடைக்காதது சென்னையில் ஒரு பெரிய பிரச்னையாகி விட்டது.


வங்காளப் பஞ்சத்தில் உயிர் துறந்தவர்களின் ஆவிகள் தேர்தல் கூட்டங்களில் அமெரியைப் பிடித்து வதைக்கின்றன. வங்காளப் பஞ்சத்துக்கு அமெரி பொறுப்பல்ல என்று ஸர் ஸ்ரீவத்ஸவா எழுதி யிருக்கும் கடிதத்தைக் கொண்டு அமெரி தம் முகத்தை மறைத்துக் கொள்கிறார்.
ஸ்ரீவத்ஸவா
கடிதம்

ஏற்பாடு செய்யப்பட வில்லையே? பிரிந்து போகும் உரிமை இல்லாவிடில் அது ஜனநாயகமா?'' என்று அந்த அபஸ்வரக் குரல் கூறியது.

இப்படியாக, ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு, அறுபது நாள் யோசனை புனராலோசனைகளுக்குப் பிறகு, 1500 மணி நேரம் கமிட்டிகளில் வாதப் பிரதிவாதங்கள் நடந்த பிறகு, எத்தனையோ நெருக்கடிகளைத் தாண்டி, எடுத்த காரியத்தை ஜயம் பெற நிறைவேற்றி விட்டு, உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு நிரந்தர ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விட்டு, கடைசியில் கலைந்தது.

இதிலிருந்து, உலகத்தில் எதற்குமே ஒரு முடிவு உண்டு என்ற உண்மையும் ஸ்தாபிதமாயிற்று.

* * *

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் முடிவாக உருவான திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

1. இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் எதிர்க் கட்சியிலிருந்து யுத்தம் செய்த தேசங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ஐக்ய தேச ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது.

2. வருங்காலத்தில் உலகத்தில் யுத்தம் வராமல் பார்த்துக் கொள்வதும், தேசங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை யுத்தம் ஏற்படாதபடி தீர்த்து வைப்பதும், ஆக்கிரமிப்புச் செய்யும் தேசங்களைக் கண்டித்து அடக்குவதும் மேற்படி ஸ்தாபனத்தின் நோக்கங்கள்.

3. மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 'பாதுகாப்புக் கௌன்ஸில்' என்பதாக ஒரு குட்டிச் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதில் சைனா, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா ஆகிய தேசங்கள் நிரந்தர ஸ்தானம் வகிக்கும். மற்ற தேசங்கள் எல்லாம் சேர்ந்து இரண்டு வருஷத்துக்கொரு முறை ஆறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்.

இந்தப் பாதுகாப்புக் கௌன்ஸிலில் உள்ளவர்கள்தான் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பு வாய்ந்தவர்கள். யுத்தம் நேராமல் தடுப்பதற்காக இவர்கள் ஆயுத பலத்தை உபயோகிக்க உரிமை கொண்டிருப்பார்கள்.

4. உலகத்தில் இன்னும் சுதந்திரம் பெறாமலிருக்கும் பிரதேசங்களை அவற்றையாளுவோர் நல்ல முறையில் ஆட்சி புரியவும், சுயாட்சி அல்லது சுதந்திரத்துக்கு அந்தத் தேசங்களைத் தயார் செய்யவும் "தர்மகர்த்தா முறை" என்பதாக ஒன்று ஏற்படுத்தப் படுகிறது. இந்த தர்மகர்த்தாப் பொறுப்பு அந்தந்த தேசத்தில் சரிவர நிறைவேற்றப் படுகிறதா என்று பார்த்துக் கொள்ள 'டிரஸ்டிஷிப் கௌன்ஸில்' ஒன்று ஏற்படுத்தப்படும்.

5. இன்னும் உலகத்தில் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பிரச்னைகள், சமூக முன்னேற்றப் பிரச்னைகள், ஜீவ காருண்யப் பிரச்னைகள் முதலியவற்றைத் தீர்த்து வைப்பதற்காகவும், உலகத்தில் பொருளாதார முன்னேற்றம், சமூக சமத்வம் முதலியவைகளை வளர்ப்பதற்காகவும் 'எகனமிக் அண்டு ஸோஷியல் கௌன்ஸில்' என்பதாக ஒன்று ஏற்படுகிறது.

6. உலக விவகாரங்களில் அநீதிகளைப் போக்கி நியாயம் வழங்குவதற்காக 'ஸர்வ தேசீய நீதி மன்றம்' ஒன்றும் ஸ்தாபிக்கப்படுகிறது.

* * *

மேற்கண்டவிதமான அரிய பெரிய முயற்சிகள் நம்முடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால் வெற்றியடைய வில்லை என்ற கெட்ட பெயருக்கு நாம் ஆளாக விரும்பவில்லை.

எனவே, நமது பரிபூரண ஆசிகளையும் மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் இதோ சமர்ப்பிக்கிறோம்.

* * *

இவ்வளவு சொன்ன பிறகு நமது பழைய முடிவான அபிப்பிராயத்தையும் இங்கே ஒரு தடவை ஞாபகப் படுத்தி வைக்கிறோம். உண்மையாகவே உலகத்திலிருந்து யுத்தம் ஒழியவேண்டுமானால், அதற்குப் பின் வரும் இரண்டு நிபந்தனைகள் நிறைவேற வேண்டும்:—

உலகத்தில் ஒரு தேசத்தார் இன்னொரு தேசத்தாரை ஆளுவது என்பது ஒழிய வேண்டும்.

ஒரு கூட்டத்தார் இன்னொரு கூட்டத்தாரைச் சுரண்டிப் பணம் சேர்ப்பது என்பதும் ஒழிய வேண்டும்.

இவ்விரு தீமைகளும் உலகிலிருந்து அடியோடு ஒழியும் வரையில், யுத்தத்தை ஒழிக்கச் செய்யும் முயற்சி எதுவும் நிரந்தரமான பலன் தராது.

ஒரு பக்கத்தில் இல்லாவிட்டால் இன்னொரு பக்கத்தில், ஒரு ரூபத்தில் இல்லாவிட்டால் இன்னொரு ரூபத்தில், யுத்த ராட்சதன் புனர் ஜன்மம் எடுத்துக்கொண்டுதானிருப்பான்.

வட்டமேஜை

24—6—45.

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!"

என்று பாரதியார் பாடியிருப்பதை, தங்கள் 'கல்கி' பத்திரிகை முகப்பில், வாரந்தோறும் எழுதி வருகிறீர்கள்.

அதில் பாரதியார் பாட்டில் உள்ள 'எங்கள்' என்ற வார்த்தை விலக்கப்பட்டிருக்கும் காரணம் விளங்கவில்லை. பெரிய கவிஞர் கலைவாணியின் அருளால் அமைந்திருக்கும் பாட்டுக்களில் உள்ள சொற்களை நமயிஷ்டம் போல் எடுப்பதும், சேர்ப்பதும், கவிகளின் அழகைக் கெடுக்குமென்பது தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல.

நிற்க, பாரதியார், 'தமிழ்த்திரு நாடு தன்னைக் கும்பிடடி பாப்பா' என்று கூறவில்லை. பாப்பா பாட்டு தன் மகளுக்காகப் பாடியபோதிலும் உலகப் பாப்பாக்களுக்கும் பொதுவாகப் பாடியிருக்கிறாரே ஒழிய, தமிழ்ப் பாப்பாக்களுக்கு மட்டும் பாடவில்லை. ஆகவே அவருக்கு வடக்கத்தியார், தெற்கத்தியார் என்ற வித்தியாசம் என்னவும் கிடையாது என்பது நன்கு விளங்குகிறது.

ஆகவே, பாரதி அன்பராகிய தாங்கள், வடக்கத்தியார்களைத் தமிழ் நாட்டினர் ஆதரிப்பதையும், பெருமைப் படுத்துவதையும் மிகவும் கண்டித்து தங்கள் பத்திரிகையில் எழுதுவது எனக்கு மிகவும் ஆச்சரியத்தையும், விசனத்தையும் உண்டு பண்ணுகிறது.

தங்கள் அன்பன்,
எஸ். எஸ். ராமானுஜம்.

["தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தின் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!"

என்பதுதான் சரியான பாடம். முப்பது வருஷத்துக்கு முன்பு பாரதியாரின் ஜீவிய காலத்தில் அச்சிட்ட "பாப்பா பாட்டு—முரசு" என்னும் நூலில் அவ்விதந்தான் இருக்கிறது. முதல் வரியில் 'எங்கள்' என்பது பின்னால் அச்சிட்ட புத்தகங்களில் தவறுதலாக நுழைந்திருக்கிறது. 'எங்கள்' என்னும் வார்த்தைக்கு அங்கு அர்த்தமில்லை; அவசியமுமில்லை; சந்தத்தின் அழகும் குன்றுகிறது.

நமது காலத்திய பாரதியாரின் பாட்டுக்கே இந்தக் கதியானால், ஆயிரம் வருஷத்துக்கு முந்திய கவிதைகள் என்ன அலங்கோலமாயிருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளலாம். அவற்றில் புகுந்துள்ள பிழைகளைப் போக்கி ஒழுங்கு செய்வது தவறாகாது. ஆனால் அதற்குத் தகுந்த யோக்கியதை உள்ளவர்கள் செய்ய வேண்டும்.


பாரதியார், பாப்பா பாட்டைத் தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்காகவே பாடியிருக்கிறார். தமிழ் தெரியாத பாப்பாக்களுக்கு அந்தப் பாட்டினால் ஒரு உபயோகமும் இல்லை. வடக்கத்தியார், தெற்கத்தியார் என்ற வித்தியாசம் பாரதியாருக்கும் கிடையாது; நமக்கும் கிடையாது. ஆனால் தமிழரையும் தமிழையும் குறைவு படுத்துவதைப் பாரதியார் பலமாக ஆட்சேபித்தார்; நாமும் அதைத்தான் ஆட்சேபிக்கிறோம்.

—ஆசிரியர்.]

எட்டயபுரம்
பாரதி ஞாபகார்த்த நிதி
1945 மே 21உலிருந்து ஜூன் 25உ முடிய வசூல்

பாரதி வாசக சாலை, நடுவிற்பட்டி, எட்டயபுரம் (ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளின் சங்கீதக் கச்சேரி மூலம்)		1591	0	0
ஸ்ரீ பி. ஏ. ராஜு செட்டியார், கோயமுத்தூர் (பொன் விழா நன்கொடை)		251	0	0
டாக்டர் பி. என். ராமசுப்ரமணியம், தல்லாகுளம், மதுரை		101	0	0
சங்கீத வித்வான் ஸ்ரீ ஜி என். பாலசுப்ரமணியம், சென்னை		50	0	0
ஸ்ரீ கே.எஸ். வையாபுரி செட்டி அண்டு சன்ஸ், சித்தோடு		26	0	0
ஸ்ரீ ஏ. எஸ். லக்ஷ்மண ரெட்டியார், திருநெல்வேலி		25	0	0
ஸ்ரீ ஜி. ஏ. நடேசன், சென்னை		25	0	0
ஒரு அனுதாபி		25	0	0
ஸ்ரீ பி.கே. வேங்கடநரசிம்மன், அட்வகேட், மயிலாப்பூர்		10	0	0
ஸ்ரீ டி. பி. ராஜு, மகாதானபுரம்		10	0	0
ஸ்ரீ டி. சுப்பய்யா, ஒட்டப்பிடாரம்		3	3	0
ஸ்ரீ எஸ். ஆர். விஸ்வநாத அய்யர், செவ்வாய்ப்பேட்டை, சேலம்		2	0	0
இலங்கை, பண்டுலோயா ஸ்ரீ எம். எஸ். பி. முத்தையா, க. செங்காமி, கே. ஆர். கந்தையா (தலா ரூ. 1 வீதம்)	ரூ.	3	0	0
ஆக வசூல்	ரூ.	2,122	3	0
ஏற்கெனவே வசூல்	ரூ.	42,618	15	8
ஆக மொத்தம்	ரூ.	44,741	2	8

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஆர். ராமசுப்ரமண்யன், ஸ்ரீ மங்கள பவனம், D. C. 800, திப்புத் தெரு, திருவனந்தபுரம்.



But...
have you tried
NIRMAL
GLASSES.
NIRMAL GLASS
WORKS LTD.
OLAVAKKOT MALABAR



பொன்மலைத் திருவிழா

திருச்சிக்கு அடுத்த பொன்மலையில் ஜனவரி 22, 23, 24ம் தேதிகளில் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளரின் மாபெரும் மகா நாடும், அதை யொட்டிய பல கிளை மகா நாடுகளும் நடைபெற்றன. மூன்று தினங்களும் பொன்மலைப் பிரதேசத்தில் ஒரு மகத்தான திருவிழா நடைபெறும் தோற்றமே காணப்பட்டது. திரள் திரளாகப் புருஷர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் கூட வந்து திருவிழாவைக் கண்டு களித்துச் சென்றார்கள்.

1. மேலேயுள்ள படம். மகாநாட்டுப் பந்தலுக்குள் பிரவேசிக்கும் அழகிய முன் வாசல் கோபுரத்தின் தோற்றம். தொழிலாளரே அமைத்தது.

2. ரயில்வேத் தொழிலாளரின் பேரெழுச்சிக்கு மூலகாரண புருஷரான ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் (சங்கத்தின் தலைவர்) பேசுகிறார்.

3. மகாநாட்டுப் பந்தலில் மணிக்கணக்காக உட்கார்ந்து பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு பகுதி.





டிருக்கிறானாம். ஐயோ! குமாரா! எப்படி உன்னிடம் சொல்வேன்? பல்லவ ராஜ்யத்தின் சிறந்த கலைச் செல்வம் பறிபோய் விட்டதோ என்றும் ஐயுறுகிறேன்.

மாமல்லா! மகனே! என்னை மன்னித்து விடு! இதோ என்னுடைய தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளப் புறப்படுகிறேன். மூர்க்க சளுக்க வீரர்களின் கொடுமைகளிலிருந்து நமது குடிகளைக் காப்பாற்றப் புறப்படுகிறேன். கோட்டையிலுள்ள சைன்யங்களை அழைத்துக் கொண்டு கிளம்புகிறேன். சேனாபதி கலிப்பகையும் என்னுடன் வருகிறார்.

குமாரா! காஞ்சி சுந்தரி பாதுகாப்பாரின்றி அநாதையாயிருக்கிறாள். நீயும் உன் தோழன் பரஞ்சோதியுந்தான் அவளைக் காப்பாற்ற வேண்டும்.

காஞ்சிக் கோட்டைக்கு நான் திரும்பி வருவேனா என்பது சந்தேகம். உன்னை உயிரோடு பார்ப்பேன் என்பதும் நிச்சயமில்லை. போர்க்களத்தில் எனக்கு வீர மரணம் கிடைத்தால், அதைக் காட்டிலும் நான் பெறக்கூடிய பேறு இனிமேல் வேறு ஒன்றும் இல்லை.

மாமல்லா! நான் செய்த துரோகத்தை மன்னித்து விடு! என்னை அடியோடு மறந்து விடு! ஆனால் அறுநூறு ஆண்டுகளாக வாழையடி வாழையாய் வந்த பல்லவ வம்சத்துக்கு இனிமேல் உன்னைத் தவிர வேறு கதியில்லை என்பதை மட்டும் மறந்து விடாதே!"

• • •

மாமல்லர் மேற்படி ஓலையைப் படித்து முடிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்னாலேயே தளபதி பரஞ்சோதி தமக்கு வந்த ஓலையைப் படித்து விட்டார். அது மாமல்லரின் ஓலையைப் போலன்றி மிகச் சுருக்கமாயிருந்தது:—

"அருமைப் புதல்வன் பரஞ்சோதிக்கு:

நீ என்னைப் பல தடவை 'நீங்கள் வாழ்க்கையில் தவறே செய்தது கிடையாதா?' என்று கேட்டதுண்டு. நானும் அளவில்லாத அகம்பாவத்துடன் 'கிடையாது' என்று சொல்லி வந்தேன். இப்போது என் வாழ்க்கையில் மகா பயங்கரமான தவறைச் செய்து விட்டேன். இராஜதந்திரத்தினால் சத்துருவை நண்பனாகச் செய்து கொள்ளப் பார்த்தேன். அதில் தோல்வியடைந்தேன். நேர்மாறான பலன் கிடைத்தது. அந்தத் தவறுக்குப் பிராயசித்தம் செய்து கொள்வதற்காக இதோ போர்க்களத்துக்குக் கிளம்புகிறேன்.

இச்சமயம் என் பக்கத்தில் நீ இல்லையே என்று வருத்தமாயிருக்கிறது. ஆனாலும் மாமல்லன் பக்கத்தில் இச்சமயம் நீ இருப்பதுதான் அதிக அவசியமானது.

நான் பல தடவையும் உன்னிடம் சொல்லியிருப்பதை மறந்து விடாதே. பல்லவ வம்சம் சந்ததியின்றி நசித்துப் போகக் கூடாது. மாமல்லனை உன்னிடம் ஒப்படைக்கிறேன்."

• • •

மாமல்லர் ஓலையை இரண்டு மூன்று தடவை படித்த பிறகு பரஞ்சோதியிடம் ஏதோ சொல்ல முயன்றார். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. எனவே, ஓலையைச் சிநேகிதரின் கையில் கொடுத்தார்.

பரஞ்சோதி அதை விரைவிலேயே படித்து முடித்து விட்டு, "ஐயா! நான் குதிரைப் படையுடன் முன்னதாகப் போகிறேன். தாங்கள் இங்கேயே தங்கிப் பின்னால் வரும் காலாட் படையையும் அழைத்துக் கொண்டு வந்து சேருங்கள்!" என்றார்.

"நல்ல காரியம் தளபதி! என் உடம்பு இங்கே இருக்கிறதே தவிர, என் உயிர் ஏற்கெனவே என் தந்தைக் கருகில் போய்விட்டது. இனிமேல் வழியில் தங்குவது என்பது கிடையாது. காலாட் படை வருகிறபடி வரட்டும். குதிரைப் படையுடன் நாம் முன்னால் போகலாம்" என்றார் மாமல்லர்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பிரதேசமானது நாலு கால் பாய்ச்சலில் சென்ற ஆயிரக் கணக்கான குதிரைகளின் காலடியினால் அதிர்ந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் ஒரே புழுதிப் படலமாயிற்று.

அத்தியாயம் 30

"சிவகாமி எங்கே?"

ஆயனர் தமது பழைய சிற்ப வீட்டை அடைந்ததிலிருந்து நரக வேதனை எப்படியிருக்குமென்பதை அநுபவித்துத் தெரிந்து கொண்டிருந்தார்.

மலையிலிருந்து விழுந்ததினால் முறிந்து போன அவருடைய வலது கால் சொல்ல முடியாத வலியையும் வேதனையையும் அவருக்குத் தந்து கொண்டிருந்தது.

சிவகாமியை இழந்ததினால் அவருடைய உள்ளம் பெருந் துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருந்தது.

மண்டபப் பட்டியிலிருந்து ஆயனரும் சிவகாமியும் சக்கரவர்த்தி அனுப்பிய பல்லக்கில் அவசரமாகக் கிளம்பிய போது ஆயனரின் சகோதரியைப் பின்னால் சாவகாசமாக வண்டியில் வந்து சேரும்படி சொல்லியிருந்தார்கள். அதன்படியே அந்த அம்மாள் முக்கியமான வீட்டுப் பொருள்களுடன் ரதியையும் சுகரையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து சேர்ந்தாள். காஞ்சிக் கோட்டைக் கதவு அவளுக்குத் திறக்கப்படாமற் போகவே யோசனை செய்து பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தாள். அந்த அம்மாள் அவ்விதம் முன்னாடியே வந்து சேர்ந்திருந்தபடியால் தான் ஆயனர் இன்னும் உயிரோடிருப்பது சாத்தியமாயிற்று.

அவருக்கு வேண்டிய சிகிச்சைகளையும் சிசுருஷைகளையும் அந்த அம்மாள் மிக்க பக்தி சிரத்தையோடு செய்து அவரை உயிர் பிழைக்கப் பண்ணியிருந்தாள்.

ஆனாலும் அவள் அடிக்கடி கேட்டு வந்த ஒரு கேள்வியானது புண்ணிலே கோலெடுத்துக் குத்துவதுபோல் அவருடைய இருதயத்தை நோகச் செய்து கொண்டிருந்தது.

அந்தக் கேள்வி "சிவகாமி எங்கே?" என்பதுதான்.

கேள்வியை நிறுத்துவதற்காக ஏதோ மறுமொழி சொல்லிப் பார்த்தார். அது சிவகாமியின் அத்தைக்குப் பிடிபடவே இல்லை. எனவே, அவளும் கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை.

இது போதாதென்று ரதியும் சுகரும் அடிக்கடி ஆயனரிடம் வந்து முகத்தைத் தூக்கிக்கொண்டு நின்று சப்தமற்ற குரலில் தங்களுடைய மௌனக் கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆயனர் கடுமையான குரலில் அதட்டி அவற்றை அப்பால் போகும்படி செய்வார்.

சுகப் பிரம்மரிஷி இப்போதெல்லாம் அதிகமாகத் தன் குரலை வெளியில் காட்டுவதில்லை. சில சமயம் திடீரென்று நினைத்துக் கொண்டு பலமான கூக்குரல் போடுவார். அப்போது அவருடைய குரலின் தொனி "சிவகாமி எங்கே?" என்று கேட்பது போலவே இருக்கும்.

* * *

அரண்ய வீட்டுக்குச் சுற்றுப் பக்கமெல்லாம் ஏதோ பெரிய அல்லோல கல்லோலம் நடந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது.

திடீர் திடீரென்று காட்டிற்குள்ளும் அப்பாலும் சமீபத்திலும் தூரத்திலும் பலர் கூச்சலிட்டுக் கொண்டு ஓடும் சத்தம் கேட்கும்; போர் முழக்கங்கள் கேட்கும்; அழுகையும் புலம்பலும் சில சமயம் கேட்கும்.

இரவு நேரங்களில் சுற்று முற்றும் பார்த்தால் தூரத்தில் திரள் திரளாகப் புகையும் நெருப்பு ஜுவாலையும் எழுவது தெரியும்.

அந்த வனத்தில் வசித்த பட்சிகளிடையே என்றும் காணாத மௌனம் சில சமயம் நிலவியது. திடீரென்று பல்லாயிரம் பட்சிகள் ஏககாலத்தில் கூச்சலிடும் சத்தம் எழும்பியது.

ஒரு நாள் அந்த அரண்யத்துக்கு வெகு சமீபத்தில் எங்கேயோ ஒரு பெரும் சண்டை நடக்கிறதென்பதற்கு அறிகுறிகள் தெரிந்தன. போர் முரசங்களின் பேரொலியும், போர்



வீரர்களின் ஜயகோஷமும், அநேக குதிரைகளும் பனிதர்களும் நடமாடும் சத்தமும், ஆயுதங்கள் மோதும் ஓசையும் அன்றைக்கெல்லாம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தன.

சாயங்காலம் திடீரென்று ஐந்தாறு வீரர்கள் மேலெல்லாம் இரத்தக் காயங்களுடன், "தண்ணீர்! தண்ணீர்!" என்று கூவிக் கொண்டு ஆயனர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவர்கள் பல்லவ வீரர்கள்தான் என்று தெரிந்து கொண்டதும் ஆயனர் தாம் படுத்திருந்த இடத்திலிருந்தே அவர்களை வரவேற்றுத் தம் அருகில் உட்காரச் சொல்லிச் சகோதரியைக் கொண்டு அவர்களுக்குத் தண்ணீரும் கொடுக்கச் செய்தார்.

பிறகு, அவர்கள் எங்கே எப்படிக் காயமடைந்தனர் என்பது பற்றி விசாரித்தார்.

"இதென்ன? உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?" என்று அவ்வீரர்கள் வியப்புடன் கேட்டனர். ஆயனர் தமது முறிந்த காலைச் சுட்டிக் காட்டினார்.

வந்த வீரர்கள் அந்தக் காலையும் சுற்று முற்றும் உடைந்து கிடந்த சிலைகளையும் பார்த்து விட்டு, "ஐயோ!

அத்தியாயம் 30

"சிவகாமி எங்கே?"

ஆயனர் தமது பழைய சிற்ப வீட்டை அடைந்ததிலிருந்து நரக வேதனை எப்படியிருக்குமென்பதை அநுபவித்துத் தெரிந்து கொண்டிருந்தார்.

மலையிலிருந்து விழுந்ததினால் முறிந்து போன அவருடைய வலது கால் சொல்ல முடியாத வலியையும் வேதனையையும் அவருக்குத் தந்து கொண்டிருந்தது.

சிவகாமியை இழந்ததினால் அவருடைய உள்ளம் பெருந் துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருந்தது.

மண்டபப் பட்டியிலிருந்து ஆயனரும் சிவகாமியும் சக்கரவர்த்தி அனுப்பிய பல்லக்கில் அவசரமாகக் கிளம்பிய போது ஆயனரின் சகோதரியைப் பின்னால் சாவகாசமாக வண்டியில் வந்து சேரும்படி சொல்லியிருந்தார்கள். அதன்படியே அந்த அம்மாள் முக்கியமான வீட்டுப் பொருள்களுடன் ரதியையும் சுகரையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து சேர்ந்தாள். காஞ்சிக் கோட்டைக் கதவு அவளுக்குத் திறக்கப்படாமற் போகவே யோசனை செய்து பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தாள். அந்த அம்மாள் அவ்விதம் முன்னாடியே வந்து சேர்ந்திருந்தபடியால் தான் ஆயனர் இன்னும் உயிரோடிருப்பது சாத்தியமாயிற்று.

அவருக்கு வேண்டிய சிகிச்சைகளையும் சிசுருஷைகளையும் அந்த அம்மாள் மிக்க பக்தி சிரத்தையோடு செய்து அவரை உயிர் பிழைக்கப் பண்ணியிருந்தாள்.

ஆனாலும் அவள் அடிக்கடி கேட்டு வந்த ஒரு கேள்வியானது புண்ணிலே கோலெடுத்துக் குத்துவதுபோல் அவருடைய இருதயத்தை நோகச் செய்து கொண்டிருந்தது.

அந்தக் கேள்வி "சிவகாமி எங்கே?" என்பதுதான்.

கேள்வியை நிறுத்துவதற்காக ஏதோ மறுமொழி சொல்லிப் பார்த்தார். அது சிவகாமியின் அத்தைக்குப் பிடிபடவே இல்லை. எனவே, அவளும் கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை.

இது போதாதென்று ரதியும் சுகரும் அடிக்கடி ஆயனரிடம் வந்து முகத்தைத் தூக்கிக்கொண்டு நின்று சப்தமற்ற குரலில் தங்களுடைய மௌனக் கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆயனர் கடுமையான குரலில் அதட்டி அவற்றை அப்பால் போகும்படி செய்வார்.

சுகப் பிரம்மரிஷி இப்போதெல்லாம் அதிகமாகத் தன் குரலை வெளியில் காட்டுவதில்லை. சில சமயம் திடீரென்று நினைத்துக் கொண்டு பலமான கூக்குரல் போடுவார். அப்போது அவருடைய குரலின் தொனி "சிவகாமி எங்கே?" என்று கேட்பது போலவே இருக்கும்.

* * *

அரண்ய வீட்டுக்குச் சுற்றுப் பக்கமெல்லாம் ஏதோ பெரிய அல்லோல கல்லோலம் நடந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது.

திடீர் திடீரென்று காட்டிற்குள்ளும் அப்பாலும் சமீபத்திலும் தூரத்திலும் பலர் கூச்சலிட்டுக் கொண்டு ஓடும் சத்தம் கேட்கும்: போர் முழக்கங்கள் கேட்கும்; அழுகையும் புலம்பலும் சில சமயம் கேட்கும்.

இரவு நேரங்களில் சுற்று முற்றும் பார்த்தால் தூரத்தில் திரள் திரளாகப் புகையும் நெருப்பு ஜுவாலையும் எழுவது தெரியும்.

அந்த வனத்தில் வசித்த பட்சிகளிடையே என்றும் காணாத மௌனம் சில சமயம் நிலவியது. திடீரென்று பல்லாயிரம் பட்சிகள் ஏககாலத்தில் கூச்சலிடும் சத்தம் எழும்பியது.

ஒரு நாள் அந்த அரண்யத்துக்கு வெகு சமீபத்தில் எங்கேயோ ஒரு பெரும் சண்டை நடக்கிறதென்பதற்கு அறிகுறிகள் தெரிந்தன. போர் முரசங்களின் பேரொலியும், போர்



வீரர்களின் ஜயகோஷமும், அநேக குதிரைகளும் பனிதர்களும் நடமாடும் சத்தமும், ஆயுதங்கள் மோதும் ஓசையும் அன்றைக்கெல்லாம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தன.

சாயங்காலம் திடீரென்று ஐந்தாறு வீரர்கள் மேலெல்லாம் இரத்தக் காயங்களுடன், "தண்ணீர்! தண்ணீர்!" என்று கூவிக் கொண்டு ஆயனர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவர்கள் பல்லவ வீரர்கள்தான் என்று தெரிந்து கொண்டதும் ஆயனர் தாம் படுத்திருந்த இடத்திலிருந்தே அவர்களை வரவேற்றுத் தம் அருகில் உட்காரச் சொல்லிச் சகோதரியைக் கொண்டு அவர்களுக்குத் தண்ணீரும் கொடுக்கச் செய்தார்.

பிறகு, அவர்கள் எங்கே எப்படிக் காயமடைந்தனர் என்பது பற்றி விசாரித்தார்.

"இதென்ன? உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?" என்று அவ்வீரர்கள் வியப்புடன் கேட்டனர். ஆயனர் தமது முறிந்த காலைச் சுட்டிக் காட்டினார்.

வந்த வீரர்கள் அந்தக் காலையும் சுற்று முற்றும் உடைந்து கிடந்த சிலைகளையும் பார்த்து விட்டு, "ஐயோ!



சளுக்க ராட்சதர்கள் இந்த வீட்டுக்குள்ளும் புகுந்து இப்படியெல்லாம் அக்கிரமங்கள் செய்து விட்டார்களா?" என்று வருத்தப்பட்டார்கள்.

பிறகு அந்த வீரர்களில் ஒருவன், புலிகேசி காஞ்சியை விட்டுப் போனதிலிருந்து அன்று மணிமங்கலத்துக் கருகில நடந்த பயங்கரமான சண்டை வரையில் எல்லாம் விவரமாகச் சொன்னான். அவன் கூறியதின் சாராம்சமாவது:—

புலிகேசி கோட்டையிலிருந்து வெளியேறியதும் தன்னுடைய மூர்க்க சைன்யத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துப் பல்லவ நாட்டுக் கிராமங்களைக் கொளுத்தவும் ஜனங்களை இம்சிக்கவும் சிற்பங்களை நாசமாக்கவும் சிற்பிகளை அங்கஹீனம் செய்யவும் கட்டளையிட்டு அனுப்பினான். இதையறிந்த சக்கரவர்த்தி கோட்டைக்குள்ளிருந்த சொற்பப் படைகளுடன் வெளிக்கிளம்பினார். அன்று காலையில் மணிமங்கலம் என்னும் கிராமத்துக் கருகில் புலிகேசியின் படைகளும் பல்லவ வீரர்களும் கைகலந்தார்கள். புலிகேசியின் வீரர்கள் எண்ணிக்கையிலும் அதிகம்; மிக்க ஆயுத பலமும் உள்ளவர்கள்;—

ஆனபோதிலும் மகேந்திர சக்கரவர்த்தியே நேரில் தலைமை வகித்துப் போர் நடத்தியபடியால காஞ்சி வீரர்கள் பிரமாதமான வீரப் போர் நடத்தினார்கள். அந்தப் பக்கத்திலும் வாதாபி சக்கரவர்த்தி புலிகேசியே தலைமை வகித்து நடத்தினர். இரு சக்கரவர்த்திகளும் போர்க் களத்தின் மத்தியில் நேருக்கு நேர் சந்தித்து வீர வாதம் செய்தபிறகு ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டார்கள்.

பல்லவ சைன்யம் ஏறக்குறையத் தோல்வி யடைந்திருந்த நிலைமையில், சற்றுத் தூரத்தில் பெரிய குதிரைப் படை ஒன்று வரும் சத்தம் கேட்டது. ரிஷபக் கொடியைப் பார்த்ததும் "இதோ மாமல்லர் வந்து விட்டார்!" என்ற கோஷம் கிளம்பியது. சற்று நேரத்துக் கெல்லாம் மாமல்லரின் குதிரைப் படை வீரர்கள் சளுக்கர் படைமேல் இடியைப் போல் விழுந்து தாக்கினார்கள்.

அவ்வளவுதான்; சளுக்க வீரர்கள் ஓட ஆரம்பித்தார்கள். அரக்கன் புலிகேசியும் ஓடிப் போனான். ஆனால் போகும்போது தன் கையிலிருந்த சிறு கத்தி ஒன்றை மகேந்திரர் மீது குறி பார்த்து எறிந்து விட்டான். மகேந்திரர் உடனே பிரக்ஞை இழந்து தரையில் விழுந்தார்.

வாதாபி வீரர்கள் போர்க்களத்தை விட்டு ஓடியபிறகு மாமல்லரும் பரஞ்சோதியும் மகேந்திர பல்லவர் விழுந்திருந்த இடத்துக்கு வந்தார்கள். அவருக்குத் தக்க சிகிச்சை செய்து காஞ்சிக்குப் பத்திரமாய் எடுத்துப் போகக் கட்டளை யிட்டுவிட்டு, புறமுதுகிட்டு ஓடிய வாதாபி வீரர்களைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

• • •

மேற்படி விவரங்களைக் கூறிய பின்னர் காயமடைந்த பல்லவ வீரர்கள் காஞ்சியை நோக்கிச் சென்றார்கள்.

மகேந்திர பல்லவருக்கு மரண காயம் என்பதைக் கேட்டதில் ஆயனர் அளவற்ற துயர மடைந்தார். ஆனாலும், மாமல்லரும் பரஞ்சோதியும் சளுக்க வீரர்களைத் தொடர்ந்து போயிருக்கிறார்கள் என்னும் செய்தி அவருக்குச் சிறிது ஆறுதலை யளித்தது. அவர்கள் எப்படியும் சிவகாமியைச் சிறை மீட்டுக்கொண்டு வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எதனாலோ அவருடைய உள்ளத்தில் உதயமாகி யிருந்தது.

• • •

மணிமங்கலம் சண்டை நடந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. ஆயனர் தினந்தோறும் ஏதேனும் நல்ல செய்தி வராதா என்று ஆவலுடன் காத்திருந்தார். வாசலில் ஏதேனும் சத்தம் கேட்டால் அவர் திடுக்கிடுவார். யாரோ செய்தியுடன் வருகிறார்கள் என்று பரபரப்புடன் எழுந்து உட்காருவார்.

இம்மாதிரி எத்தனையோ தடவை ஏமாற்றம் அடைந்த பிறகு கடைசியில் உண்மையாகவே இரண்டு குதிரைகள் அவர் வீட்டை நெருங்கி வரும் சத்தம் கேட்டது. வந்த குதிரைகள் வீட்டு வாசலில் நின்றன என்பதும் தெரிந்தது.

வாசற்படி வழியாக நுழைந்து வரப் போகிறவர்கள் யார் என்று கொட்டாத கண்களுடனும் துடிதுடித்த நெஞ்சுடனும் ஆயனர் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆசை வீண் போகவில்லை. ஆம்! மாமல்லரும் பரஞ்சோதியும்தான் உள்ளே நுழைந்து வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் முதலிலே ஆயனருடைய முகத்தில் மகிழ்ச்சிக் களை படர்ந்தது. ஆனால் அவர்கள் நெருங்கி வர வர மகிழ்ச்சி குன்றியது. கவலை அதிகமாயிற்று.

மாமல்லரின் முகத்தில் தோன்றிய கேள்விக் குறியானது ஆயனருடைய உள்ளத்தில் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று.

மாமல்லர் வாய் திறந்து கேட்பதற்கு முன்னால் அவர் கேட்கப் போகும் கேள்வியைத் தாமே கேட்டு விட வேண்டுமென்று தீர்மானித்தார் ஆயனர்.

அந்தச் சிற்ப மண்டபமும் அதற்கு வெளியிலிருந்த அரண்யமும் பிரதித்வனி செய்யும்படியான சோகம் நிறைந்த குரலில், "பிரபு! என் சிவகாமி எங்கே?" என்று அலறினார்.

நம்பர் 144



வஸந்தன்

பொது ஜன அமைதியைப் பாதுகாப்பதற்காக அடக்குமுறை சர்க்கார் கையாளும் 144-செக்ஷனுக்கும் இந்தக் கதைக்கும் யாதொரு சம்பந்தமும் இடையாது. ஆனால் 144-நம்பருக்கு என்னவோ இந்தக் கதையில் ரொம்ப நெருங்கிய சம்பந்தம் இருக்கத்தான் செய்கிறது. அதாவது, தஞ்சாவூர் ஜில்லா, பாலூர் தாலூகா போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த 144-ம் நம்பர் கான்ஸ்டேபின் ராமதுரைதான் இந்தக் கதையின் முக்கிய பாத்திரம்.

சர்க்கார் எதற்கெடுத்தாலும் 144 போடுகிறார்களல்லவா, அதே மாதிரி பாலூர் ஸப் இன்ஸ்பெக்டர் சட்டநாத ஐயர் எதற்கெடுத்தாலும், "144! 144!" என்றுதான் கூப்பிடுவார். எங்கே யாவது அடிதடியா, கொள்ளையா, கொலையா எதற்கெடுத்தாலும் நம்பர் 144 தான் போகவேண்டும்.

ராமதுரை போலீஸ் டிபார்ட்மென்டில் சேர்ந்து இன்னும் இரண்டு வருஷம் கூட ஆகவில்லை. அதற்குள் அவன் மேலதிகாரிகளின் நல்லபிப்பிராயத்தைச் சம்பாதித்துக் கொண்டு விட்டான். குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலும், புலன் விசாரிப்பதிலும் ராமதுரைக்கு ஈடு ராமதுரையேதான் என்று பெயர் வாங்கிவிட்டான்.

ஸப் இன்ஸ்பெக்டர் சட்டநாத ஐயர் 144-ஐ ரொம்பவும் விரும்பியதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. ராமதுரைக்குக் கெட்ட பழக்கம் ஒன்றும் இல்லை. கெட்ட வழிகளுக்கே அவன் போகமாட்டான். சகுனம் பார்த்துக் கொண்டு கச்சேரிக்குக் கிளம்பும் கட்டுப் பெட்டியான சட்டநாத ஐயருக்கு, ராமதுரையின் விபூதிப் பட்டையும் குங்குமப் பொட்டும் ரொம்பவும் திருப்தியளித்தன.

பாலூர் ஸ்டேஷனில் இருந்த மற்ற கான்ஸ்டேபின்கள் பதினறு பேர்களுமே ராமதுரையை ஒரு தினுசாகத்தான் பார்ப்பார்கள். "செல்லப் பிள்ளை!" என்று அவனைக் கேலி செய்வார்கள். "பூனை, வேஷம் போடுகிறது!" என்பார்கள். ஆனால் ராமதுரை ஒன்றையும் காதில் போட்டுக் கொள்வதில்லை. தான் உண்டு; தன் காரியம் உண்டு என்று இருந்து விடுவான்.

ஆனால் ஹெட் கான்ஸ்டேபின் கைலாசம் பிள்ளைக்கோ, ராமதுரையைப் பார்க்கப் பார்க்க அடி வயிற்றைப் பற்றிக் கொண்டுதான் வந்தது.

ராமதுரை வந்ததிலிருந்து அவனுக்கு இருந்த கௌரவம் எல்லாம் போய் விட்டது. எப்படியாவது ராமதுரையை வம்பில் மாட்டிவைத்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்று நினைத்தான்.

• • •

ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணி இருக்கும். கடைத் தெருவில் ஒரு மூலையில் ராமதுரை நின்றுகொண்டு 'பீட்' கொடுத்துக் கொண்டிருந்தான். எங்கும் நிசப்தம் நிலவியது. அவன் தேகத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் எங்கிருந்து என்ன சத்தம் வருகிறது என்று அறிவதற்குத் துடித்துக் கொண்டிருந்தது. சென்ற சில மாதங்களாகவே, கடைத் தெருவிலிருந்து எவ்வளவோ சாமான்கள் திருட்டுப் போயிருந்தன. திடீர் திடீரென்று கடைகளிலுள்ள மிளகாய், உளுந்து, பருப்பு முதலிய முக்கியமான சாமான்கள் காணமற் போய்விடும். எப்படி ஒரு குறிப்பிட்ட சாமான்கள் மட்டும் கடைகளிலிருந்து மாயமாய் மறைகின்றன என்பது ஆச்சரியமாக இருந்தது. பிறகு அந்தச் சாமான்களுக்கு நெருக்கடி ஏற்பட்டதும், கறுப்பு மார்க்கட்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சரக்கு வெளியே வரும். யாரோ ஒரு திருட்டுக் கும்பல் கட்டுப்பாடாக இந்த வேலையை நடத்துகிறார்கள் என்று ராமதுரை சந்தேகித்து வந்தான். இதையெல்லாம் கருதியே கடைத்தெருவில் நின்றுகொண்டு ஏதாவது புலன் அகப்படுமா என்று சர்வ ஜாக்கிரதையாகச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்விதம் ஒரு மாதமாகப் பிரதி தினமும் நின்று அவனுக்கு அலுத்து விட்டது.

சமீபத்தில் சட்டென்று ஏதோ சத்தம் கேட்டது. யாரோ ஒருவர் தும்முகிற சத்தம். ராமதுரை பளிச்சென்று 'டார்ச்' விளக்கைப் போட்டான். சற்று தூரத்தில் ஒரு பெரிய உருவம் முதுகில் எதையோ தூக்கிக் கொண்டு வீதிக்குக் குறுக்கே வேகமாகப் போவது தெரிந்தது. இந்த அர்த்த ஜாமத்தில் மூட்டை தூக்கிக் கொண்டு போவது யார்? இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும்!

சிறிது நேரம் ராமதுரை நின்று, அவனுக்குப் பின்னால் யாராவது வருகிறார்களா? — என்று கவனித்தான். யாரும் வரவில்லை. ராமதுரை மின்னல் போல் பாய்ந்து சற்று தூரம் ஓடினான். ஒரு குறுக்குச் சந்து கடை வீதியுடன் சேரும் இடத்துக்கு வந்தான்.

அந்த ஆசாமி சந்தின் வழியாகத்தான் போயிருக்க வேண்டும். ராமதுரை சந்தில் திரும்பிச் சர்வ ஜாக்கிரதையுடன் முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு சென்றான்.

'கிரீச்'சென்று சற்றுத் தூரத்தில் ஒரு சத்தம் கேட்டது. இரும்புக் கதவை யாரோ திறப்பதுபோல் சத்தம். ராமதுரை மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒளிந்திருந்து கவனித்தான். அவன் முகத்தில் திடீரென்று பிரகாசம் தோன்றியது. இப்படியும் இருக்குமா? ஒரு வேளை அந்தப் பழைய மோட்டார் ஷெட்டுக்குள் அந்த ஆசாமி சாமானைக் கொண்டு போய்ப் பதுக்கி வைக்கிறானோ?

அந்தப் பெரிய சந்தின் மத்தியில் ஒரு பெரிய காம்பவுண்ட். அதன் மத்தியில் தான் அந்த மோட்டார் ஷெட் இருந்தது.

ஒரு பெரிய மோட்டார் கம்பெனி சமீபத்தில் திவாலாகி விட்டது அவனுக்குத் தெரியும். அந்த மோட்டார் ஷெட் சில மாதங்களாக உபயோகிப்பார் இல்லாமல் பாழாகக் கிடந்தது. இப்பொழுது நல்லதாய்ப் போச்சு! அந்த இடத்தை நன்றாய்ச் சோதனை போட்டு விடலாம். அந்த ஆசாமி அங்கே போயிருக்கும் பட்சத்தில் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விடலாமல்லவா?

ராமதுரை என்றுமில்லாத சந்தோஷத்துடன் மெதுவாகக் 'காம்பவுண்ட் கேட்' அருகில் சென்று மெதுவாகத் தள்ளினான்; கதவு திறந்து கொண்டது. மறுகணம் சத்தப் படுத்தாமல் உள்ளே நுழைந்தான்.

அவன் உள்ளே நுழைந்ததுதான் தாமதம்; மிகவும் எதிர்பாராத சம்பவம் நடந்தது. அவனுக்குப் பின்னே கேட்டை யாரோ 'டக்' கென்று சாத்தித் தாழ்ப்பாள் போட்டு விட்டார்கள்! ராமதுரையின் நெஞ்சு 'திக்'கென்றது. யார் அவனை உள்ளே வைத்துப் பூட்டினது? அவனைத் தந்திரமாக ஆபத்தில் மாட்டி வைப்பதற்குச் செய்த சதி மாதிரியல்லவா இருக்கிறது? அவன் உடம்பு வியர்த்தது. ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். ஏதோ விபத்தில் மாட்டிக் கொண்டு விட்டதாக அவன் மனம் எச்சரித்தது.

வந்ததுதான் வந்து விட்டோம் — ஷெட்டுக்குள்ளேதான் பார்க்கலாமே என்று ராமதுரை தீர்மானித்தான். 'டார்ச் லைட்'டைப் போட்டுக்கொண்டு உள்ளே போனான். ஆள் நடமாட்டமே காணோம்.

மூட்டையைத் தூக்கிக்கொண்டு வந்த ஆள் எங்கே? அது யாராக இருக்கக் கூடும்? ரொம்ப நாளாக அவனுக்கு





ஒரு பழைய கேடிமீது சந்தேகம் இருந்தது. வீரபத்திரப் பிள்ளை யென்றால் அந்தப் பக்கத்திலேயே மகா போக்கிரி என்று பிரசித்தம். இத்தமாதிரி திருட்டுத் தொழிலை அவ்வளவு சாமர்த்தியமாக நடத்த அவன் ஒருவனால்தான் முடியும் என்று அவன் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவன் மேல் கை வைக்க ராமதுரைக்குப் போதுமான ருஜு இதுவரை அகப்படவில்லை.

சற்று முன் மூட்டையைத் தூக்கிக் கொண்டு வந்த ஆசாமி ஒருவேளை வீரபத்திரப் பிள்ளையாக இருக்குமோ என்று நினைத்தான். ஆனால் மறு கணம் பளிச் சென்று ஒரு சந்தேகம் உதித்தது. ஒரு வேளை, மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருவதுபோல் பாசாங்கு செய்து தன்னை இங்கே அழைத்து வந்த ஆசாமி கைலாசம் பிள்ளையாக இருக்குமோ? கிட்டத்தட்ட கைலாசம் பிள்ளைக்கும் வீரபத்திரப் பிள்ளைக்கும் உருவத்தில் அதிக வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது.

இவ்விதம் யோசித்தபடியே ஷெட்டைச் சுற்றிக் கொண்டே வந்தபோது, சட்டென்று எதையோ பார்த்துவிட்டு ராமதுரை நின்றான். அப்பொழுது அவன் மெய்சிலிர்த்தது. 'ஆஹா! என்ன நயவஞ்சகம்!' என்று அவனையு மறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

மூலையில் ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பாயின் மேல் நான்கு பிராந்திப் புட்டிகள் இருந்தன. ஒரு கிளாஸும் அருகே வைக்கப்பட்டிருந்தது. ஒரு கொடியில் ராமதுரைக்குச் சூழ்ச்சி வெளியாகிவிட்டது. எல்லாம் இந்தக் கைலாசம் பிள்ளையின் வேலைதான்.

இரவு ஒரு மணியுடன் அவன் பாரா முடிந்துவிடும். 'பீட்'டில் தன்னைக் காணாமல் எல்லாரும் தேடுவார்கள். கைலாசம் பிள்ளை சாமர்த்தியமாக இன்ஸ்பெக்டரை இங்கே அழைத்துக் கொண்டு வந்து, பிராந்திப் புட்டியையும் தன்னையும் காண்பித்து விடுவான். குடிகாரன் என்று அவர் மனத்தில் தகாத சந்தேகத்தைக் கிளப்பி விட்டுப் போய்விட்டால், அப்புறம் தன் பாடு அதோ கதிதானல்லவா?

ராமதுரையின் மனதில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைச் செருகியதுபோலிருந்தது. இந்தக் குழப்பத்திலிருந்து அவன் நீங்குவதற்குள்ளாக வேறொரு அதிசயம் நடந்தது.

'கட முட' வென்று ஏதோ ஒரு சத்தம் எங்கிருந்தோ கேட்டது. ராமதுரை கூர்ந்து கவனித்தான். எங்கிருந்தோ வெகு தொலைவிலிருந்து, அது வருவது போலிருந்தது. அதள பாதாளத்திலிருந்து வருவதுபோலிருந்தது.

தரையை நோக்கி அவன் கண்கள் கூர்ந்து கவனித்தன. ஷெட்டின் ஒரு மூலையைப் பார்க்க விரைந்து சென்றான். கீழே கிடந்த வைக்கோல்களைத் துருவிப் பார்த்தன அவன் கைகள். மறுகணம், பெரிய பீப்பாயின் மூடியைப் போன்ற ஒரு பொருள் அவனுக்குத் தட்டுப்பட்டது. அதை மெதுவாகத் தூக்கினான். என்ன அதிசயம்?

கீழே ஒரு பெரிய பள்ளம் இருந்தது. எட்டிப் பார்த்தான். ஒரு மர ஏணி கீழே சாத்தியிருந்தது. "ஆஹா! ஏதோ பாதாள அறை!" என்று முணுமுணுத்தான். 'லைட்'டைப் போட்டபடியே படிக்கட்டுக்கள் வழியாகக் கீழே இறங்கிச் சென்றான்.

சற்றும் எதிர்பாராத அதிசயத்தை அங்கே கண்டான் ராமதுரை. பெருங்காய வாசனையும், கற்பூர



நிற்பவர் :—என்ன ஸார் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?
உட்கார்ந்திருப்பவர் (அரை ரூபாயைத் தொலைத்துவிட்டு தந்திரமாக):-காலணா கீழே விழுந்து விட்டது. அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்.
நிற்பவர் :—அப்படியானால் இதோ ஒரு அரை ரூபாய் அகப்பட்டது: அதை நானே எடுத்துக் கொள்கிறேன்!

ராமதுரை வந்ததிலிருந்து அவனுக்கு இருந்த கௌரவம் எல்லாம் போய் விட்டது. எப்படியாவது ராமதுரையை வம்பில் மாட்டிவைத்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்று நினைத்தான்.

• • •

ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணி இருக்கும். கடைத் தெருவில் ஒரு மூலையில் ராமதுரை நின்றுகொண்டு 'பீட்' கொடுத்துக் கொண்டிருந்தான். எங்கும் நிசப்தம் நிலவியது. அவன் தேகத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் எங்கிருந்து என்ன சத்தம் வருகிறது என்று அறிவதற்குத் துடித்துக் கொண்டிருந்தது. சென்ற சில மாதங்களாகவே, கடைத் தெருவிலிருந்து எவ்வளவோ சாமான்கள் திருட்டுப் போயிருந்தன. திடீர் திடீரென்று கடைகளிலுள்ள மிளகாய், உளுந்து, பருப்பு முதலிய முக்கியமான சாமான்கள் காணாமற் போய்விடும். எப்படி ஒரு குறிப்பிட்ட சாமான்கள் மட்டும் கடைகளிலிருந்து மாயமாய் மறைகின்றன என்பது ஆச்சரியமாக இருந்தது. பிறகு அந்தச் சாமான்களுக்கு நெருக்கடி ஏற்பட்டதும்,கறுப்பு மார்க்கட்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சரக்கு வெளியே வரும். யாரோ ஒரு திருட்டுக் கும்பல் கட்டுப்பாடாக இந்த வேலையை நடத்துகிறார்கள் என்று ராமதுரை சந்தேகித்து வந்தான். இதையெல்லாம் கருதியே கடைத்தெருவில் நின்றுகொண்டு ஏதாவது புலன் அகப்படுமா என்று சர்வ ஜாக்கிரதையாகச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்விதம் ஒரு மாதமாகப் பிரதி தினமும் நின்று அவனுக்கு அலுத்து விட்டது.

சமீபத்தில் சட்டென்று ஏதோ சத்தம் கேட்டது. யாரோ ஒருவர் தும்முகிற சத்தம். ராமதுரை பளிச்சென்று'டார்ச்' விளக்கைப் போட்டான். சற்று தூரத்தில் ஒரு பெரிய உருவம் முதுகில் எதையோ தூக்கிக் கொண்டு வீதிக்குக் குறுக்கே வேகமாகப் போவது தெரிந்தது. இந்த அர்த்த ஜாமத்தில் மூட்டை தூக்கிக் கொண்டு போவது யார்? இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும்!

சிறிது நேரம் ராமதுரை நின்று, அவனுக்குப் பின்னால் யாராவது வருகிறார்களா? — என்று கவனித்தான். யாரும் வரவில்லை. ராமதுரை மின்னல் போல் பாய்ந்து சற்று தூரம் ஓடினான். ஒரு குறுக்குச் சந்து கடை வீதியுடன் சேரும் இடத்துக்கு வந்தான்.

அந்த ஆசாமி சந்தின் வழியாகத் தான் போயிருக்க வேண்டும். ராமதுரை சந்தில் திரும்பிச் சர்வ ஜாக்கிரதையுடன் முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு சென்றான்.

'கிரீச்'சென்று சற்றுத் தூரத்தில் ஒரு சத்தம் கேட்டது. இரும்புக் கதவை யாரோ திறப்பதுபோல் சத்தம். ராமதுரை மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒளிந்திருந்து கவனித்தான். அவன் மூகத்தில் திடீரென்று பிரகாசம் தோன்றியது. இப்படியும் இருக்குமா? ஒரு வேளை அந்தப் பழைய மோட்டார் ஷெட்டுக்குள் அந்த ஆசாமி சாமானைக் கொண்டு போய்ப் பதுக்கி வைக்கிறானோ?

அந்தப் பெரிய சந்தின் மத்தியில் ஒரு பெரிய காம்பவுண்ட். அதன் மத்தியில் தான் அந்த மோட்டார் ஷெட் இருந்தது.

ஒரு பெரிய மோட்டார் கம்பெனி சமீபத்தில் திவாலாகி விட்டது அவனுக்குத் தெரியும். அந்த மோட்டார் ஷெட் சில மாதங்களாக உபயோகிப்பார் இல்லாமல் பாழாகக் கிடந்தது. இப்பொழுது நல்லதாய்ப் போச்சு! அந்த இடத்தை நன்றாய்ச் சோதனை போட்டு விடலாம். அந்த ஆசாமி அங்கே போயிருக்கும் பட்சத்தில் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விடலாமல்லவா?

ராமதுரை என்று மில்லாத சந்தோஷத்துடன் மெதுவாகக் 'காம்பவுண்ட் கேட்' அருகில் சென்று மெதுவாகத் தள்ளினான்; கதவு திறந்து கொண்டது. மறுகணம் சத்தப் படுத்தாமல் உள்ளே நுழைந்தான்.

அவன் உள்ளே நுழைந்ததுதான் தாமதம்; மிகவும் எதிர்பாராத சம்பவம் நடந்தது. அவனுக்குப் பின்னே கேட்டை யாரோ 'டக்' கென்று சாத்தித் தாழ்ப்பாள் போட்டு விட்டார்கள்! ராமதுரையின் நெஞ்சு 'திக்'கென்றது. யார் அவனை உள்ளே வைத்துப் பூட்டினது? அவனைத் தந்திரமாக ஆபத்தில் மாட்டி வைப்பதற்குச் செய்த சதி மாதிரியல்லவா இருக்கிறது? அவன் உடம்பு வியர்த்தது. ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். ஏதோ விபத்தில் மாட்டிக் கொண்டு விட்டதாக அவன் மனம் எச்சரித்தது.

வந்ததுதான் வந்து விட்டோம் — ஷெட்டுக்குள்ளேதான் பார்க்கலாமே என்று ராமதுரை தீர்மானித்தான். 'டார்ச் லைட்'டைப் போட்டுக்கொண்டு உள்ளே போனான். ஆள் நடமாட்டமே காணோம்.

மூட்டையைத் தூக்கிக்கொண்டு வந்த ஆள் எங்கே? அது யாராக இருக்கக் கூடும்? ரொம்ப நாளாக அவனுக்கு

ஒரு பழைய கேடிமீது சந்தேகம் இருந்தது. வீரபத்திரப் பிள்ளை யென்றால் அந்தப் பக்கத்திலேயே மகா போக்கிரி என்று பிரசித்தம். இந்தமாதிரி திருட்டுத் தொழிலை அவ்வளவு சாமர்த்தியமாக நடத்த அவன் ஒருவனால்தான் முடியும் என்று அவன் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவன் மேல் கை வைக்க ராமதுரைக்குப் போதுமான ருஜு இதுவரை அகப்படவில்லை.

சற்று முன் மூட்டையைத் தூக்கிக் கொண்டு வந்த ஆசாமி ஒருவேளை வீரபத்திரப் பிள்ளையாக இருக்குமோ என்று நினைத்தான். ஆனால் மறு கணம் பளிச் சென்று ஒரு சந்தேகம் உதித்தது. ஒரு வேளை, மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருவதுபோல் பாசாங்கு செய்து தன்னை இங்கே அழைத்து வந்த ஆசாமி கைலாசம் பிள்ளையாக இருக்குமோ? கிட்டத்தட்ட கைலாசம் பிள்ளைக்கும் வீரபத்திரப் பிள்ளைக்கும் உருவத்தில் அதிக வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது.

இவ்விதம் யோசித்தபடியே ஷெட்டைச் சுற்றிக் கொண்டே வந்தபோது, சட்டென்று எதையோ பார்த்துவிட்டு ராமதுரை நின்றான். அப்பொழுது அவன் மெய்சிலிர்த்தது. 'ஆஹா! என்ன நயவஞ்சகம்!' என்று அவனையுமறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

மூலையில் ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பாயின் மேல் நான்கு பிராந்திப் புட்டிகள் இருந்தன. ஒரு கிளாஸும் அருகே வைக்கப்பட்டிருந்தது. ஒரு கொடியில் ராமதுரைக்குச் சூழ்ச்சி வெளியாகி விட்டது. எல்லாம் இந்தக் கைலாசம் பிள்ளையின் வேலைதான்.

இரவு ஒரு மணியுடன் அவன் பாரா முடிந்து விடும். 'பீட்'டில் தன்னைக் காணாமல் எல்லாரும் தேடுவார்கள். கைலாசம் பிள்ளை சாமர்த்தியமாக இன்ஸ்பெக்டரை இங்கே அழைத்துக் கொண்டு வந்து, பிராந்திப் புட்டியையும் தன்னையும் காண்பித்து விடுவான். குடிகாரன் என்று அவர் மனத்தில் தகாத சந்தேகத்தைக் கிளப்பி விட்டுப் போய்விட்டால், அப்புறம் தன் பாடு அதோகதிதானல்லவா?

ராமதுரையின் மனதில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைச் செருகியதுபோலிருந்தது. இந்தக் குழப்பத்திலிருந்து அவன் நீங்குவதற்குள்ளாக வேறொரு அதிசயம் நடந்தது.

'சுட மூட' வென்று ஏதோ ஒரு சத்தம் எங்கிருந்தோ கேட்டது. ராமதுரை கூர்ந்து கவனித்தான். எங்கிருந்தோ வெகு தொலைவிலிருந்து, அது வருவது போலிருந்தது. அதள பாதாளத்திலிருந்து வருவதுபோலிருந்தது.

தரையை நோக்கி அவன் கண்கள் கூர்ந்து கவனித்தன. ஷெட்டின் ஒரு மூலையைப் பார்க்க விரைந்து சென்றான். கீழே கிடந்த வைக்கோல்களைத் துருவிப் பார்த்தன அவன் கைகள். மறுகணம், பெரிய பீப்பாயின் மூடியைப் போன்ற ஒரு பொருள் அவனுக்குத் தட்டுப்பட்டது. அதை மெதுவாகத் தூக்கினான். என்ன அதிசயம்?



நிற்பவர்:—என்ன ஸார் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?

உட்கார்ந்திருப்பவர் (அரை ரூபாயைத் தொலைத்துவிட்டு தந்திரமாக):-காசணு கீழே விழுந்து விட்டது. அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்.

நிற்பவர்:—அப்படியானால் இதோ ஒரு அரை ரூபாய் அகப்பட்டது: அதை நானே எடுத்துக்கொள்கிறேன்!

கீழே ஒரு பெரிய பள்ளம் இருந்தது. எட்டிப் பார்த்தான். ஒரு மர ஏணி கீழே சாத்தியிருந்தது. "ஆஹா! ஏதோ பாதாள அறை!" என்று முணுமுணுத்தான். 'லைட்'டைப் போட்டபடியே படிக்கட்டுகள் வழியாகக் கீழே இறங்கிச் சென்றான்.

சற்றும் எதிர் பாராத அதிசயத்தை அங்கே கண்டான் ராமதுரை. பெருங்காய வாசனையும், கற்பூர

மணமும், மிளகாய் வற்றல் நெடியு மாகக் கலந்து அடித்தது. விதம் விதமான சாமான்கள் பெட்டிகளிலும் மூட்டைகளிலும் அடைக்கப் பட்டுக் கீழே கிடந்தன.

ராமதுரையின் ஹிருதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அடடா! இவ்வளவு நாளாகக் கடைகளில் திருட்டுப் போன அத்தனை சாமானும் இங்கேயல்லவா இருக்கிறது? சமீபத்தில் கற்பூரப் பெட்டிகளைக் காணோம் என்றார்களே, இதோ இருக்கின்றனவே!

"ஹா! ஹா! ஹா!" என்ற பயங்கரச் சிரிப்பைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் ராமதுரை. பெட்டிகளுக்கு அப்பாலிருந்து ஒரு உருவம் தலையை நீட்டியது. ராமதுரையின் நெஞ்சு துணுக்குற்றது. சமாளித்துக் கொண்டு, "வீரபத்திரப் பிள்ளையா? இத்தனை நாளாக உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். அகப் பட்டுக் கொண்டீர்களா?"

"அகப்பட்டுக் கொண்டது நீயா, நானா?"

"சந்தேகம் வேறேயா? கற்பூரத்தைத் திருடிய திருடன்தான்!"

"கற்பூரத்தையாவது நான் திருடவாவது! அந்தக் கற்பூரத்தை வேண்டுமானாலும் ஏற்றி வைத்துச் சத்தியம் செய்கிறேன், தம்பி! எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை."

ராமதுரை அதற்கு மேல் பேசவில்லை. கைச்சட்டையை மடித்துக் கொண்டு வீரபத்திரப் பிள்ளை மீது பாய்ந்தான்! மறுகணம் வீரபத்திரப் பிள்ளை கீழே விழுந்து உருண்டு கொண்டிருந்தான்.

"என்ன அண்ணே! எழுந்திரு! ஸ்டேஷனுக்குப் போகலாம்" என்று ராமதுரை சொன்னானோ இல்லையோ, திடீரென்று அவன் தலையில் ஒரு பெரிய வெடிகுண்டு வெடிப்பதைப்போல் இருக்கவே, திரும்பிப் பார்த்தான். எதிரே ஜட்கா வண்டிக்காரத் துரைசாமி நின்று பயங்கரமாகச் சிரித்தான். அவன் வீரபத்திரப் பிள்ளையின் கூட்டாளி என்று ராமதுரை சந்தேகித்தது உண்டு. அவன் கையிலுள்ள பாணைத் தடியைப் பார்த்ததுமே, பின்னாலிருந்து அவன் கோழைத்தனமாகத் தன் மண்டையில் அடித்து விட்டானென்பதை அறிந்து கொண்டான் ராமதுரை. மறுகணம் அவன் தலை சுழன்றது. தள்ளாடிக் கொண்டே கீழே விழுந்தான்.

ராமதுரை கண்ணை விழித்துப் பார்த்தபோது உடம்பெல்லாம் மரண வேதனையாக இருந்தது. உடம்பை அசைக்க முடியவில்லை. அந்தக் கொலை பாதகர்கள் தன் கையையும் காலையும் கட்டிப் போட்டதுடன் வாயில் துணியையும் அடைத்து விட்டார்கள் என்பது தெரிந்தது. ராமதுரை தலையைத் தூக்கிக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். வீரபத்திரப் பிள்ளையும் துரைசாமியும் எதிரே சற்று தூரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏன் இன்னும் தன்னைக் கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறார்கள்? ஏன் அவர்கள் அதற்குள் தூங்கி விட்டார்கள்? — என்று யோசித்தான்.

எங்கிருந்தோ திடீரென்று சத்தம் கேட்டது. வாசல் கதவைப் படீரென்று திறப்பதுபோலவும், 'திமு திமு'வென்று யார் யாரோ ஓடி வருவதுபோலவும் கேட்டது. டார்ச் விளக்குகள் எங்கும் பறந்து வீசின. "ராமதுரை! ராமதுரை!" — மிகவும் பழகிய குரல். ஆமாம், இன்ஸ்பெக்டரின் குரல்! ராமதுரை வாயைக் கூடத் திறக்க முடியவில்லை. "கைலாசம்! நீ ஊகித்துச் சொன்னது சரிதான்! அதோ ராமதுரை!"—மறுநிமிஷம் இன்ஸ்பெக்டர் சட்டநாத ஐயர், குனிந்து தன்னைக் கூப்பிடுவதை உணர்ந்தான்.

"ராமதுரை! ஆபத்தில் சிக்கிக்கொண்டாயா? ஐயோ, தலையில் பலமான அடி. 888! இந்தக் கட்டை அவிழ்த்து விடு! வாயிலுள்ள துணியை எடு" என்று இன்ஸ்பெக்டர் கட்டளை யிட்டார். கைலாசம் பிள்ளை கட்டை அவிழ்த்துக் கொண்டிருக்கும்போதே, ராமதுரை மெதுவாகத் திரும்பிச் சற்று முன் வீரபத்திரப் பிள்ளையும் துரைசாமியும் படுத்திருந்த இடத்தைப் பார்த்தான். அவர்கள் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் அவர்கள் இருந்த இடத்துக்குப் போய், காலால் ஒரு உதை கொடுத்தார். "ஐயோ, பாவம்! ரொம்ப அசதி போலிருக்கிறது. இவர்களைத் தூக்கிக் கொண்டுபோய் லாரியில் போடு" என்றார். ராமதுரை உடல் வேதனையால் மறுபடியும் மூர்ச்சையாகி விட்டான்.

* * *

மேற்படி சம்பவம் நடந்த பதினைந்து நாட்களுக்கெல்லாம் தலையில் கட்டுடன் ராமதுரை ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான். ஸப் இன்ஸ்பெக்டர்

உடனே அவனைப் பார்க்க விரும்புவதாகத் தகவல் வரவே போலீஸ் ஸ்டேஷனைப் பார்க்கச் சென்றான். உள்ளே போய் எஜமானுக்கு 'சல்யூட்' போட்டான். சப் இன்ஸ்பெக்டருக்கு எதிரே உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரி சூபரிண்டெண்ட் சுசைநாதப் பிள்ளை என்று அவனுக்குத் தெரிந்து விட்டது.

"ஸார்! இந்தப் பிள்ளையாண்டான் தான் ராமதுரை. இவன் தான் அந்தக் கொள்ளைக்கார வீரபத்திரப் பிள்ளையைப் பிடித்தது!" என்று அவனை மேலதிகாரிக்கு அறிமுகப்படுத்தினார் ஸப் இன்ஸ்பெக்டர். "சபாஷ்!" என்றார் சூபரிண்டெண்ட்.

"இங்கே பார், ராமதுரை! உனக்கு ஸி. ஐ. டி. யில் சேர இஷ்டமா என்று சூபரிண்டெண்ட் கேட்கிறார். உன்னைப்போல் புத்திசாலித்தனமும் தைரியமும் உள்ள ஆள்தான் அதற்குத் தேவை. உனக்குச் சம்மதமானால் நீ தஞ்சாவூருக்கு உன் உடம்பு குணமானதும் போகவேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

சிறிது நேரம் அவன் யோசித்து விட்டு, "அப்படியே செய்கிறேன். ஸி. ஐ. டி. யில் சேர்ந்து விடுகிறேன்" என்றான் ராமதுரை.

வாசற்படியில் நின்று அவனை வெறித்துப் பார்த்தான் ஹெட்கான்ஸ்டேபிள் கைலாசம்.

"அண்ணே! இனிமேல் என்னைப் பார்த்து நீ ஆத்திரப் படமாட்டாய். என்னைத் தஞ்சாவூருக்கு மாற்றச் சொல்லிக் கேட்டுக் கொண்டு விட்டேன்" என்றான் ராமதுரை.

"ஏன்?" என்றான் கைலாசம்.

"ஏனென்றால், இங்கே நமக்குள்ளே தான் ஒரே புகைச்சலாயிருக்கிறது. நான் போய்விட்டால் உனக்குக் கஷ்டமில்லாமல் இருக்குமல்லவா? நான் இங்கிருக்கிறதாலேதானே மனஸ்தாபம், சண்டை சச்சரவு, மண்டைக் காயம் எல்லாம்?"

கைலாசத்துக்குச் சுருக் கென்றது. குற்றம் செய்து விட்டவனைப்போல் திருதிருவென்று விழித்தான்.

சிறிது தூரம் சென்ற ராமதுரை திரும்பி வந்து, கைலாசத்தைப் பார்த்துத் தயக்கத்துடன், "அண்ணே! நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"என்ன?" என்றான் கைலாசம்.

"அன்றைக்கு ராத்திரி நீதானே மூட்டையைத் தூக்கிக்கொண்டு, என்னை 'ஷெட்டு'க்குள்ளே அழைத்து வந்து, அதற்குள்ளே என்னை வைத்துப் பூட்டினாய்? நாலு பிராந்திப் புட்டி வாங்கிக் கொண்டு வந்து உள்ளே வைத்ததும் நீதானே? ஐயாவைக் கூட்டிக்கொண்டு வந்து எனக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கத்தானே அப்படிச் செய்தாய்?" என்று கேட்டான் ராமதுரை.

"ஆமாம்" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான் கைலாசம்.

"அண்ணே, நீ கெட்டதை நினைத்துச் செய்யப்போக அதுவே நல்லதாய்ப் போச்சு. நாலு புட்டியாக வாங்கினைத் தாயோ' நான் பிழைத்தேனே. அவ்வளவையும் அவர்கள் குடித்துவிட்டுப் பிரக்ஞை இல்லாமல் போனதினாலே தான் நான் உயிரோடு பிழைத்தேன். அவர்கள் சுயபுத்தியுடன் இருந்திருந்தால் என்னைக் கொன்று குளத்தில் கொண்டுபோய்ப் போட்டிருப்பார்கள்! அண்ணே! நீதான் என்னைக் காப்பாற்றினாய்!" என்று கைலாசத்தைஅணைத்துக் கொண்டான் ராமதுரை.

உணர்ச்சியை என்றும் அறியாத கைலாசத்தின் முகத்தில் அப்பொழுது உணர்ச்சி பொங்கிற்று.



"என் ஸார், ஏதோ வியாபாரத்தில் திடீரென்று ஆயிரம் ரூபாய் பணம் வந்ததாமே! அதை என்ன செய்தீர்கள்?"

"அதை அப்படியே இரும்புப் பெட்டியில் போட்டு விட்டேன்."

"இரும்புப் பெட்டியிலா? தங்களிடம் இரும்புப் பெட்டியே கிடையாதென்று சொன்னீர்களே!"

"ஆமாம்; ஆயிரம் ரூபாய்க்கு ஒரு இரும்புப் பெட்டி வாங்கிவிட்டேன்."

கிடைக்காத புடவை

— சோமாஸ் —

அந்தப் புடவையைப் பார்த்ததும் சரோஜாவுக்குத் தாங்கமுடியாத சந்தோஷத்தினால் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. ஜகதீசன் ஆபீஸிலிருந்து வரும் வரையில் காத்துக் கொண்டிருப்பது அவளுக்கு மிகவும் சிரமமாயிருந்தது. ஒரு நிமிஷம் ஒரு யுகமாகத் தோன்றியது சரோஜாவுக்கு.

அதற்கேற்றாற்போல் பல யுகங்கள் கழிந்த பிறகுதான் ஜகதீசனும் ஆபீஸிலிருந்து வந்தான். அவன் வந்ததும் வராததுமாக, சரோஜா அவனுக்குக் காட்டிய மரியாதை பிரமாதமாயிருந்தது.

சரோஜா காப்பி, டிபன் கொடுத்த விமரிசையைக் கண்டதும் ஜகதீசனுக்குக் கொஞ்சம் பயமாய்த்தான் போய்விட்டது. ஏதாவது புதுப்புடவை, நகை இவைகளுக்காக இதெல்லாம் நடக்கிறதோ என்று நினைத்து அவன் பயந்தான்.

அவன் அதிக நேரம் அப்படி பயப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. அதற்குள் சரோஜா அந்தப் புடவையைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள்.

"ஏது இந்தப் புடவை? நன்றாயிருக்கிறதே!" என்றான் ஜகதீசன்.

"இந்தப் புடவையைக் காண்பிப்பதற்காகத்தான் நீங்கள் ஆபீஸிலிருந்து எப்போது வரப்போகிறீர்கள் என்று ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தேன்! எனக்கு நன்றாயிருக்குமா?" என்று கேட்டாள் சரோஜா பெருமையுடன்.

"சொல்ல வேண்டுமோ அதை? உனக்கு இந்தப் புடவை பொருத்தமாயில்லையென்றால் பிறகு யாருக்குத்தான் பொருத்தமாயிருக்கும்? இது ஏது?" என்று கேட்டான் ஜகதீசன்.

"அடுத்த வீட்டு ராஜத்தினுடையது. அவள் அகத்துக்காரர் பம்பாய்க்குப் போயிருந்தாரல்லவா? அங்கிருந்து வாங்கி வந்திருக்கிறார். அது இருக்கட்டும். இதுமாதிரிப் புடவை எனக்கு ஒன்று வாங்கித் தருகிறீர்களா?" என்று கேட்டாள் சரோஜா.

ஜகதீசனுக்கு வீட்டிலுள்ள சாமான்களெல்லாம் சுற்றுவதுபோல் இருந்தது. சற்று நிதானித்துக் கொண்டு, "சரோஜா, இந்தப் புடவையின் விலை என்னவென்று உனக்குத் தெரியுமா? இது உயர்ந்த பட்டுப் புடவை. நல்ல ஜரிகை 'பார்டர்' வேறு போட்டிருக்கிறது. விலை நூறு ரூபாய்க்கு மேல் இருக்குமே! இப்பொழுது என்னிடம் பணம் ஏது? விஷயம் தெரியாதவள் மாதிரி கேட்கிறாயே?" என்றான் ஜகதீசன். அப்பொழுது அவன் குரலில் கொஞ்சம் திகில் கலந்திருந்தது.

"உங்களிடம் பணம் இருக்கும்போது புடவை வாங்குவதென்றால், அலை ஓய்ந்த பிறகு சமுத்திர ஸ்நானம் செய்வது போலத்தான். புடவை வாங்காவிட்டால் கிடக்கிறது! அதற்காக முகத்தைத் தூக்கிக் கொள்ள வேண்டாம்!" என்று கூறிவிட்டு, சரோஜா மட்டும் முகத்தைத் தூக்கிக் கொண்டாள்!

ஜகதீசன் அதற்குமேல் வாய் திறக்கவில்லை. அந்தப் புடவையைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.



அன்று இரவு வெகு நேரம் கழித்து வந்த ஜகதீசன், "சரோஜா, எல்லா இடங்களிலும் விசாரித்து விட்டேன். இந்த மாதிரி புடவை ஒரு கடையிலும் இல்லை. அலைச்சல்தான் மிச்சம்!" என்று கூறிக் கொண்டே ஊஞ்சலில் உட்கார்ந்தான்.

"நிஜமாகவா?"

"ஆமாம்; இன்று இரண்டு ரூபாய் செலவு. கடைசியில் உன் மனசுக்கு என்னவோ அதிருப்திதான்!" என்று கூறிக் கொண்டே ஜகதீசன் அவள் முகத்தைப் பார்த்தான்.

என்ன ஆச்சரியம்! அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக அவள் முகம் பிர

காசமாயிருந்தது. அந்த மாதிரிப் புடவை கிடைக்கவில்லை யென்றதும் சினிமாவில் நடக்கிறமாதிரி சரோஜா மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விடுவாள் என்று நினைத்தான் ஜகதீசன். ஆனால் எதிர்பாராத விதமாக ஜகதீசனுக்குத்தான் ஆச்சரியத்தினால் மூச்சு நின்று விடும்போலிருந்தது.

சரோஜா, பரமானந்தத்துடன், "ரொம்ப சந்தோஷம். இது பக்கத்து வீட்டு ராஜத்தின் புடவையல்ல; பம்பாயிலிருந்து அப்பா அனுப்பியிருக்கிறார். நல்ல வேளை! இதைப் போன்ற புடவை எந்தக் கடையிலும் கிடைக்காமல் இருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்! கிடைக்கவில்லை. இனிமேல் நான் தாராளமாக இந்தப் புடவையைக் கட்டிக் கொள்ளலாம். என் தோழிகளில் ஒருத்திகூட இந்தமாதிரிப் புடவையைக் கட்டிக்கொண்டு வரமாட்டாளல்லவா? இந்தப் புது மோஸ்தர் புடவையை நான்தான் முதன் முதலில் கட்டிக் கொண்டேன் என்னும் பெருமை என்னைச் சேருமல்லவா?" என்றாள்.



குடிகாரன்:—நான் இப்போ எங்கே இருக்கேன்?

போலீஸ்காரன்:—நீ அப்பு முதலித் தெருவில் இருக்கிறாய்!



குடிகாரன்:—அது எனக்குத் தெரியும். அதைக் கேட்கலிங்க!

போலீஸ்காரன்:—எந்த ஊரில் என்று கேட்கிறாயா? மதராஸில்தான்!



குடிகாரன்:—அது எனக்குத் தெரியுங்க! அதைக் கேட்கலிங்க!......



...... நான் எந்த உலகத்திலே இருக்கேன்னு கேட்டேனுங்க!

— ராமா —



குழந்தை காரண மில்லாமல் அழும்பொழுது

அவனுக்கு அதிக உணவினுலோ அல்லது ஜீரணக் கோளாரினுலோ வயிற்றில் ஏற்பட்டிருக்கும் சங்கடத்தைத் தெரிவிக்கிறுன். அவனுக்கு வயிறு ஒப்புசம் அல்லது வலியிலிருந்து சாந்தமேற்படுவதற்கும் அவஸ்தை ஜாஸ்தியாகாமல் தடுப்பதற்கும் ஐ. டி. எல். கிரைப் சிரப் தேவையாய் இருக்கிறது. அது ஒருவிதமான கெடுதலும் செய்யாது. நீங்கள் பத்திரமாய்

அவனுக்கு கிரைப் சிரப் கொடுங்கள்

I·T·L

இது ஒரு மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

ரை-ட. ஐ. T. M.



அழகுத் தெய்வமான

மன்மதன், இளவேனில் ஒய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் கவி காளிதாசர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக் கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும் அழகும் கூந்தலுக்குத் தந்து, கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினுல் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகு படுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணு 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

NO. 1.



இந்தியாவிற்காகவும் உங்களுக்காகவும்
சிக்கனக் குறிப்புக்கள்
இந்தக்காலத்தில் ஏழைகளுக்கு உதவும் பொருட்டு நாம் எல்லோரும் அநேக சாமான்களைக் குறைவாகவே உபயோகிக்க வேண்டும். அவற்றைக் குறைவாக உபயோகிப்பதின் மூலம் அவை மிக அவசியமாக தேவையுள்ளவர்களுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்கிறீர்கள். இழைவிட்ட காலர் ஒட்டுப்போட்ட ஜோடுகளையும் பெருமையோடு அணிந்துகொள்ளுங்கள். இந்தக்காலத்தில் பொருட்களை மிச்சமாகச் செலவிடுவது நாட்டுப்பற்று மட்டுமன்றி நாகரீகமுங்கூட.
மற்றுமொரு நன்மையும் இதனால் உண்டு. பழைய சாமான்களைக் கொண்டே காலம் கடத்துவதாலும், நாள்தோறும் எல்லாவற்றிலும் சிக்கன முறையைக் கையாளுவதாலும் அதிகத் தொகை மிச்சமாகிறது. விலைகள் குறைகிறபோது பொருட்களை வாங்க அதிக ரூபாய்கள் கையில் இருக்கும்.
பொருட்களை மிதமாய்ச் செலவிட்டு, அவை தாராளமாய்க் கிடைக்கும்படிச் செய்யுங்கள்.
1
பற்பசைகளை சிக்கனமாய் உபயோகியுங்கள். பழைய ட்யூப்களை குப்பைக் கடைகளுக்கு அனுப்புங்கள்.
2
சமீபத்தில் உள்ள இடங்களுக்கு நடந்தோ அல்லது சைக்கிளிலோ சென்று, பணத்தை மிச்சப்படுத்துங்கள்.
3
ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்கும் உணவு வகைகளைக் குறையுங்கள்.
4
நன்கு பராமரிக்கப்பட்ட விளக்குக்கு, குறைவான மண்ணெண்ணெய் போதும்.
5
புது நகைகள் வாங்காதீர்கள். நீங்கள் அதற்குக் கொடுக்கும் விலைக்கு, அது தகுந்ததல்ல.
6
பென்சில், இங்க், எழுதும் காகிதம் மற்ற எல்லா ஸ்டேஷனரி சாமான்களிலும் சிக்கனத்தைக் கையாளுங்கள்.
உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்
இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு

"கொடுக்கா விட்டால் என்ன செய்து விடுவாய்?" என்று சொல்லிக் கொண்டே ஆலமரத்தின்மேல் ஏறிக் கொண்டார் அணில் ராயர். குண்டு விடவில்லை. கீழே இருந்தபடி கற்களைப் பொறுக்கி அணில் ராயர் மீது வீசி எறிந்தது.

கடைசியில் அணில் ஒரு கல் இடுக்கில் புகுந்து கொண்டது. முயல் அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளி விட்டு அணிலைத் தேடிற்று. அங்கே அணிலைக் காணவில்லை. அதற்குப் பதிலாக ஒரு குடம் இருந்தது. இந்தக் குடத்துக்குள் தான் அணில் ராயர் புகுந்து கொண்டிருக்க வேண்டுமென்று குடத்துக்குள் எட்டிப் பார்த்தது குண்டு. என்ன ஆச்சரியம்! அந்தக் குடம் நிறையத் தங்க நாணயங்கள் இருந்தன.

ஆனந்தத்துடன் அந்தக் குடத்தை அப்படியே தூக்கிக் கொண்டுபோய் முயல் அம்மாவிடம் கொடுத்தது.

தாய் முயலுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஆனால் அத்துடன்



உபா:—கேட்டதற்கு உண்மையாக பதில் சொல்லு! நேற்று ராத்திரி நீ டிராமாவுக்குப் போனது உண்டா, இல்லையா?

பையன்:— நிச்சயமாக இல்லை, ஸார்!

உபா:— ஏன் பொய் சொல்லுகிறாய்? உனக்குப் பின்னாலிருந்த வரிசையில் நாயுடு உட்கார்ந்திருந்தானாம்; உன்னை நன்றாகப் பார்த்ததாகச் சொன்னானே?

பையன் (ஆத்திரமாக):— சுத்தப் பொய் ஸார்! நான் உட்கார்ந்திருந்தது தான் கடைசி பெஞ்சி, ஸார்!

கவலையும் அதைப் பிடித்து வாட்டத் தொடங்கியது. சிறு பிள்ளைத்தனமாகக் குண்டு புதையல் கிடைத்த விஷயத்தை யாரிடமாவது சொல்லி விட்டால் சிங்க ராஜாவின் காதில் அது விழுந்து விடப்போகிறது. அப்புறம் சிங்கராஜாவே எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு விடப்போகிறார். இதற்கு என்ன செய்வது என்று அது யோசித்தது.

கடைசியில் அதற்கு ஒரு யோசனை தோன்றிற்று. அந்த யோசனையின்படி குண்டு தூங்கிக் கொண்டிருந்த சமயம் பார்த்துத் தாய் முயல் கூரை மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, கொஞ்சம் சர்க்கரையைக் கீழே கொட்டி விட்டு இறங்கி விட்டது.

தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட குண்டு முயல் தன்மேல் சர்க்கரை பொழிந்திருப்பதைப் பார்த்துவிட்டு அந்த அதிசயத்தை ஓடோடியும் வந்து தன் தாயிடம் தெரிவித்தது. பிறகு வெளியே சென்று தன் நண்பர்களிடமெல்லாம் "அடேய்! இன்று எல்லாம் ஒரே ஆச்சரியமாய்ப் போச்சுடா! காலையில் எனக்கு ஒரு தங்கப் புதையல் கிடைத்தது; பிறகு என்னடா என்றால் எங்கள் வீட்டின்மேல் சர்க்கரை மழை பொழிந்தது" என்று சொல்லி ஆரவாரம் செய்தது.

"தங்கப் புதையல்" என்றதும் அதைக் கேட்ட சில மிருகங்கள் நம்பத்தான் செய்தன. ஆனால் அதற்குப் பின்னால் சர்க்கரை மழை என்றதும் மற்ற மிருகங்களால் அதை நம்ப முடியவில்லை.


"போடா பைத்தியம்! தங்கப் புதையலாவது, சர்க்கரை மழையாவது? மழை பெய்தால் உங்க வீட்டில் மாத்திரம் பெய்யுமோ? காடு முழுவதும் அல்லவா பெய்திருக்க வேண்டும்?" என்று சொல்லிச் சிரித்தன.

குண்டுவின் முகத்தில் அசடு வழிந்தது.

இந்தக் காட்சியைத் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தாய் முயல், தன் தந்திரம் பலித்ததைக் கண்டு சந்தோஷமடைந்தது.

இந்தியாவிற்காகவும் உங்களுக்காகவும்

சிக்கனக் குறிப்புக்கள்




இந்தக்காலத்தில் ஏழைகளுக்கு உதவும் பொருட்டு நாம் எல்லோரும் அநேக சாமான்களைக் குறைவாகவே உபயோகிக்க வேண்டும். அவற்றைக் குறைவாக உபயோகிப்பதின் மூலம் அவை மிக அவசியமாக தேவையுள்ளவர்களுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்கிறீர்கள். இழைவிட்ட காலை ஒட்டுப்போட்ட ஜோடுகளையும் பெருமையோடு அணிந்துகொள்ளுங்கள். இந்தக்காலத்தில் பொருட்களை மிச்சமாகச் செலவிடுவது நாட்டுப்பற்று மட்டுமன்றி நாகரீகமுங்கூட.

மற்றுமொரு நன்மையும் இதனால் உண்டு. பழைய சாமான்களைக் கொண்டே காலம் கடத்துவதாலும், நாள்தோறும் எல்லாவற்றிலும் சிக்கன முறையைக் கையாளுவதாலும் அதிகத் தொகை மிச்சமாகிறது. விலைகள் குறைகிறபோது பொருட்களை வாங்க அதிக ரூபாய்கள் கையில் இருக்கும்.


பொருட்களை மிதமாய்ச் செலவிட்டு, அவை தாராளமாய்க் கிடைக்கும்படிச் செய்யுங்கள்.




1 பற்பசைகளை சிக்கனமாய் உபயோகியுங்கள். பழைய ட்யூப்களை குப்பைக் கூடங்களுக்கு அனுப்புங்கள்.



2 சமீபத்தில் உள்ள இடங்களுக்கு நடந்தே அல்லது சைக்கிளிலோ சென்று, பணத்தை மிச்சப்படுத்துங்கள்.



3 ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்கும் உணவு வகைகளைக் குறையுங்கள்.



4 நன்கு பராமரிக்கப்பட்ட விளக்குக்கு, குறைவான மண்ணெண்ணெய் போதும்.



5 புது நகைகள் வாங்காதீர்கள். நீங்கள் அதற்குக் கொடுக்கும் விலைக்கு, அது தகுந்ததல்ல.



6 பென்சில், இங்க், எழுதும் காகிதம் மற்ற எல்லா ஸ்டேஷனரி சாமான்களிலும் சிக்கனத்தைக் கையாளுங்கள்.

உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்

இந்திய சர்க்கார் இ. க. பி. இலாகா வெளியீடு

மூன்றாவது நாள் யுத்தம்



சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

மூன்றாவது நாள் உதயமானதும் பீஷ்மர் தம் சேனையைக் கருடவியூகமாக அமைத்துத் தாமே அதன் முன்னணியில் நின்றார். துரியோதனன் வியூகத்தின் பின் பாகத்தில் தன் பரிவாரத்துடன் நின்று காத்தான். மிக்க ஜாக்கிரதையாக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தபடியால் வியூகம் அன்று உடையவே உடையாது என்று கௌரவர்கள் நிச்சயமாக இருந்தார்கள்.

பாண்டவர்களும் தம் சேனையை நன்றாகவே அணிவகுத்தார்கள். தனஞ்சயனும் திருஷ்டத்யும்னனும் கௌரவர்களுடைய கருடவியூகத்தை வளைத்துத் தாக்கப் பாண்டவ சேனையை அர்த்த சந்திர வடிவமாக வகுத்தார்கள். பிறையின் வலப்பக்கத்துக் கொம்பில் பீமனும் இடக் கொம்பில் அருச்சுனனுமாகச் சேனையை இரு பக்கத்திலும் காத்து நடத்தினார்கள்.

இவ்வாறு அணிவகுக்கப்பட்ட இரு சேனைகளும் ஒன்றையொன்று தாக்கின. எல்லா பகுதிப் படைகளும் போரில் கைகலந்து இரத்தம் ஆறாக ஓடிற்று. தேரும் குதிரையும் யானையும் கிளப்பிய புழுதி சூரியனை மறைத்தது. தனஞ்சயன் மிகக் கடுமையாகத் தாக்கினான். ஆயினும் பகைவரின் வியூகத்தை உடைக்க முடியவில்லை.

பிறகு, கௌரவர்களும் பாண்டவர் வியூகத்தை உடைக்கப் பார்த்தார்கள். கௌரவரின் முழு பலமும் அருச்சுனன் மேல் செலுத்தப்பட்டது. பள பள வென்று மின்னும் கூரிய சக்தியாயுதங்களையும் பரிகங்களையும் ஈட்டிகளையும் முத்கரங்களையும் பரசுகளையும் தனஞ்சயனுடைய தேரின்மேல் வீசினார்கள். விட்டிற் பூச்சிக் கூட்டத்தைப்போல் தன் ரதத்தை நோக்கி வரும் சஸ்திரங்களை அற்புத சாமர்த்தியமாகத் தன் ரதத்தைச் சுற்றி அம்புகளை இடைவிடாமல் செலுத்தி அரண் உண்டாக்கிக் கொண்டு அருச்சுனன் தடுத்தான்.


மற்றொரு புறம் சாத்யகியும் அபிமன்யுவும், சகுனியையும் அவன் பெரும் படையையும் எதிர்த்தார்கள். சாத்யகியின் தேர் உடைந்து தூள் தூளாகப் போயிற்று. உடனே அவன் அபிமன்யுவின் தேரில் ஏறிக்கொண்டு ஒரே ரதத்தில் இருவருமாகச் சகுனியின் சேனையைத் தாக்கித் துவம்சம் செய்தார்கள். துரோணரும் பீஷ்மரும் இருவரும் சேர்ந்து தருமபுத்திரன் இருந்த படை வகுப்பைத் தாக்கினார்கள். நகுல சகதேவர்கள் தரும புத்திரனுக்குச் சகாயமாய்ச் சென்று துரோணருடைய படையை எதிர்த்தார்கள். பீமனும் கடோத்கசனும் சேர்ந்து துரியோதனனை எதிர்த்தார்கள். அந்தப் போரில் கடோத்கசன் தன் பிதாவை மிஞ்சிய பராக்கிரமத்தைக் காட்டினான்.

பீமனுடைய பாணம் துரியோதனனை இடித்து அவன் மூர்ச்சையடைந்து ரதத்தில் பிரக்ஞையில்லாமல் சாய்ந்தான். இதைக் கண்டு அவனுடைய சாரதி தேரை வெகு வேகமாகப் போர்க்களத்தினின்று அப்புறப்படுத்தினான். துரியோதனன் மூர்ச்சையடைந்ததைக் கண்டு சேனை பீதி அடைந்து அணிவகுப்புக் கலைந்து போகும் என்று அவன்

இவ்வாறு செய்தான். ஆனால் அதுவே குழப்பத்துக்குக் காரணமாயிற்று. துரியோதனன் யுத்தகளத்தை விட்டுப் போய் விட்டான் என்று கௌரவ சேனை கலக்கமடைந்து இங்கு மங்கும் ஒழுங்கின்றி ஓடி அணிவகுப்பு அடியோடு கலைந்து விட்டது. ஓட்டம் பிடித்த படைகளைப் பீமசேனன் பாணங்களால் துன்புறுத்தினான்.

இவ்வாறு கௌரவ சேனையானது சிதறியோடுவதைத் துரோணரும் பீஷ்மரும் பார்த்துக் கஷ்டப்பட்டுத் தடுத்து நிறுத்தினார்கள். துரியோதனனும் திரும்ப வந்து நாலா பக்கமும் சென்று சிதறிக்கிடந்த சேனையை மறுபடி ஒன்று கூட்டி அணிவகுத்தான். அதன் மேல் அவன் பீஷ்மரிடம் சென்று "நீரும் துரோணரும் நின்று தலைமை வகித்த சேனை இவ்வாறு சிதறியடிக்கப் பட்டு ஓடினால் அந்த அவமானத்தை எவ்வாறு நீர் பொறுத்துக்கொண்டு சும்மா நிற்கிறீர்? பாண்டவர்களிடம் உமக்குள்ள அன்பே இதற்குக் காரணம். 'பாண்டவர்களையும் திருஷ்டத்யும்னனையும் சாத்யகியையும் என்னால் எதிர்க்க முடியாது. அவர்கள் எனக்குப் பிரியமானவர்கள்' என்று எனக்கு ஏன் வியக்தமாகச் சொல்லி யிருக்கக் கூடாது? இவர்களை எதிர்ப்பது உண்மையில் உங்களுக்கு ஒரு கஷ்டமல்ல. தாங்களும் துரோணரும் என்னைக் கைவிடுவதா யிருந்தால் இப்போதாவது பளிச்சென்று சொல்லி விடலாம்" என்று தகாத முறையில் பிதாமகரைத் தாக்கிப் பேசினான்.

தோல்வியினால் ஏற்பட்ட மனக் கலக்கத்தினாலும், தான் செய்த தவறுதல்கள் பீஷ்மருக்கு வெறுப்பாக இருப்பதை அறிந்திருந்தபடியாலும் துரியோதனன் இவ்வாறு பேசினான்.



"குடியினால் ஏற்படும் தீமைகள் அநேகம். அதில் ஒன்று அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன்; சிலர் குடித்துவிட்டுப் பைத்தியக்காரனைப் போல் உளறிக் கொண்டே இருப்பார்கள். அதை வேண்டா வெறுப்பாக அவனைச் சுற்றிப் பலர் கேட்டுக் கொண்டே இருப்பார்கள்."

மூர்க்கனுடைய பேச்சைக் கேட்டு பீஷ்மர் பலமாகச் சிரித்தார். "அரசனே! உனக்கு நான் சந்தேகமறச் சொன்ன புத்திமதியை நீ கேட்கவில்லை. பாண்டவர்களை நீ ஜயிக்க முடியாது என்கிற உண்மையை உனக்கு நான் சொல்லியும் கேளாமல் நீ யுத்தத்தை ஆரம்பித்தாய். அது என் குற்றமல்ல. ஆயினும் உனக்காக நான் என் கடமையைச் செய்கிறேன். நான் கிழவன். என் சக்தியின் அளவில் நான் செய்யக் கூடியதைச் செய்வேன். என் முழு பலத்தையும் உன் கண் முன்னில் செலுத்துவேன்; பார்ப்பாயாக" என்று துரியோதனனுக்குப் பிரதிஜ்ஞை செய்து கொடுத்து மறுபடியும் போர் துவக்கினார்.

முற்பகலில் நடந்திய நிகழ்ச்சிகளின் பயனாகப் பாண்டவர்கள் மிகக் களிப்புற்றிருந்தார்கள். ஓடிய சேனையை ஒன்று சேர்த்துப் பாண்டவர் சேனையை மறுபடியும் பீஷ்மர் தாக்குவார் என்று எதிர்பார்க்கவில்லை. அதுவரையில் நடைபெறாத கோரமான யுத்தம் நிகழ்ந்தது. மாயையினால் தன்னைப் பல பீஷ்மர்களாகச் செய்து கொண்டாரோ என்று எல்லாரும் எண்ணும்படியாக பீஷ்மர் ரணகளத்தில் எங்கும் காணப்பட்டார். துரியோதனன் இடித்துச் சொன்ன வார்த்தைகள் அவருடைய கோபத்தைத் தூண்டவே, சுழலும் கொள்ளிக்கட்டையின் வட்டத்தைப்போல் யுத்தகளத்தில் நாலா பக்கமும் சுற்றினார். நெருப்பில் பூச்சிகள் வந்து விழுவதுபோல் அவரைத் தாக்கிய வீரர்கள் மாண்டார்கள். பாண்டவ சேனை தைரியம் இழந்து சிதறிப் போக ஆரம்பித்தது. வாசுதேவனும் பார்த்தனும் சிகண்டியும் எவ்வளவு முயற்சித்தும் தடுக்க முடியவில்லை. அப்போது கிருஷ்ணன் "தனஞ்சயனே! உன்னுடைய சோதனைக்காலம் வந்துவிட்டது. பீஷ்மர் துரோணர் பந்துமித்திரர்கள் அனைவரையும் கொல்லப் போகிறேன் என்று நீ செய்த பிரதிஜ்ஞையை நிறைவேற்றவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. நம்முடைய சேனை பயத்தினால் நிலைதவறி யிருக்கிறது. இப்போது நீ பீஷ்மரைத் தாக்க வேண்டும்" என்றான்.

• • •

"ரதத்தைச் செலுத்து" என்றான் அருச்சுனன்.

பீஷ்மரை நோக்கி மிக வேகமாகத் தனஞ்சயனுடைய தேர் சென்றது.

பிதாமகர் அதைப் பார்த்துச் சரமாரி பொழிந்தார். அருச்சுனன் காண்டீபத்தை வளைத்து மூன்று பாணங்களைச் செலுத்தி பீஷ்மருடைய வில்லை உடைத்தான். உடனே அவர் வேறொரு வில்லை எடுத்தார். அதுவும் முறிந்தது. அருச்சுனனுடைய லாகவத்தைப் பார்த்து ஆசாரியார் மகிழ்ந்து "வீரனே! வா!" என்று சொல்லி ஒரு வில்லை எடுத்துப் பிழையாத பாணங்களைப் பொழியச் செய்தார். அந்தத் தாக்குதலை அருச்சுனன் தடுத்த முறை கிருஷ்ணனுக்குத் திருப்தி தரவில்லை. பிதாமகருடைய தாக்குதல் பலமாக இருந்தது. அவர் பேரில் இவன் வைத்திருக்கும் கௌரவத்தால் இவனுடைய கைகள் சரியாக வேலை செய்யவில்லை. நம்முடைய படை பயந்து ஓடிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இவ்வாறு தயங்கினால் காரியம் கெட்டுப் போகும் என்று கிருஷ்ணன் தனக்குள் எண்ணினான்.

தேரை மிகத் திறமையாக வளைத்து வளைந்து ஓட்டினான். ஆயினும் உடலில் பல இடங்களில் அருச்சுனனும் கிருஷ்ணனும் அம்புகளால் அடிபட்டார்கள். ஜனார்த்தனனுடைய கோபம் பொங்கிற்று. "இதை இனிப் பொறுக்க முடியாது. பீஷ்மரை நானே கொல்லுவேன்!" என்று கிருஷ்ணன் குதிரைகளின் கடிவாளத்தை விட்டுவிட்டுச் சக்கராயுதத்தைக் கையில் பிடித்துத் தேரினின்று கீழே குதித்தான். குதித்து பீஷ்மர் இருந்த இடம் நோக்கி மிக வேகமாகச் சென்றான்.

பீஷ்மரோ இதைக் கண்டு கலக்கமடையவில்லை. சந்தோஷ முகத்தோடு "வா! வா! தாமரைக் கண்ணா! மாதவா! லோகநாதா! உன்னை வணங்குகிறேன். எனக்காகத் தேரினின்று இறங்கினாயா? நீயே என்னை வீழ்த்துவாயாக! மூவுலகத்திலும் எனக்குப் புகழ் அளித்தவனாவாய்! உன் கையினால் நான் கொல்லப்பட்டால் தன்னியனாவேன்" என்று கூறினார்.

காரியம் கெட்டுவிட்டது என்று அருச்சுனன் ரதத்தை விட்டுக் கீழே அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த கிருஷ்ணனைத் துரத்திக்கொண்டு ஓடி வெகு சிரமப்பட்டுக் கிருஷ்ணனைப் பிடித்துக் கொண்டான். "கோபம் வேண்டாம்! திரும்புவாயாக. இந்தக் காரியத்தை நான் செய்கிறேன்" என்று அருச்சுனன் சொன்னபின் கிருஷ்ணன் மறுபடியும் தேர் ஏறிக் குதிரைகளை நடத்தலானான்.

அதன்பின் அருச்சுனன் கௌரவப் படையைப் பலமாகத் தாக்கி ஆயிரக் கணக்கான பேர்களை வதம் செய்தான். அன்று மாலை யுத்தம் முடிந்ததும் கௌரவ சேனை பெரும் தோல்வியுற்று தீவட்டிகளின் வெளிச்சத்தில் பாசறை திரும்பிற்று.

"அருச்சுனன் வெற்றி பெறுவது தகுந்ததே. அவனுடைய சாமர்த்தியத்தை வேறு யார் படைத்திருக்கிறார்கள்?" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு போனார்கள்.

நாமக்கல் கவிஞர் நிதி

ஜனாப் அப்துல் காதர் ராவுத்தர் எம்.எல் ஏ., வத்தலகுண்டு, மதுரை	200	0	0
ஸ்ரீ வி. எஸ். வெங்கடாச்சாரி, விட்டலபுரம்	15	0	0
ஸ்ரீ வி. டி. மாணிக்க முதலியார், ஜௌளி மர்ச்சன்ட், ஈரோடு	5	0	0
ஸ்ரீ எஸ். பி. சுப்பிரமணியம், நீடாமங்கலம்	1	0	0

கோம்பை சப்—போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீ சண்முகசுந்தரம் மூலம்:—

ஜனாப் உ.ம.சே. சின்ன முகியித்தீன் ராவுத்தர், கோம்பை	100	0	0
ஸ்ரீ டி. ஆர். டி. ரங்கையன் செட்டியார்	10	0	0
ஸ்ரீ எஸ் பி. குப்தா	10	0	0
ஒரு முஸ்லிம் அபிமானி	10	0	0
ஸ்ரீ கே. அல்லாபிச்சை ராவுத்தர்	5	0	0
ஸ்ரீ வி. எஸ். வெங்கட்ராமன் செட்டியார்	5	0	0
ஸ்ரீ க. ஷண்முகசுந்தரம், சப்—போஸ்ட் மாஸ்டர், கோம்பை	5	0	0
ஸ்ரீ மு. தாண்டவம், மானேஜர், சி. பி. சி. பாங்கு, கோம்பை	5	0	0
ஸ்ரீ வி. எஸ். கோவிந்த கிருஷ்ணனும், ஸ்ரீ வி. எஸ். ராமசாமியும்	5	0	0
ஸ்ரீ வி. ரங்கமாணிக்கம்	5	0	0
ஆக வரவு ரூ.	381	0	0

மேற்படி தொகை ரூ. 381-ம் நாமக்கல் கவிஞர் நிதிப் பொக்கிஷதாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

★

பெங்களூரில் நாமக்கல் கவிஞருக்காக நிதி திரட்டி வந்த கமிட்டியார், வரும் ஜூலை மாதம் இருபத்தோராந் தேதி சனிக்கிழமை மாலை நாலு மணிக்குப் பெங்களூர் நகர மண்டபத்தில் டாக்டர் பி. சுப்பராயன் தலைமையில் நாமக்கல் கவிஞருக்குப் பண முடிப்பு அளிக்கும் வைபவத்தை நடத்தப் போகிறார்கள். அந்த விழாவுக்குக் கல்கி ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி, திருநெல்வேலி இந்துக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் ஸ்ரீ எ. சீனிவாசராகவன், தமிழ்ப் பண்ணை ஸ்ரீ நா. அண்ணாமலை முதலானவர்கள் அழைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

ரேடியோ நிலையத்துக்கு நடுவே சில காலம் இருந்து வந்ததோர் குறை 23உ. நீங்கியது. அன்று பிரபல மேடை வித்வான் ஸ்ரீ ஜி. என். பாலசுப்ரமணியம் சென்னையில் முழுக்கச்சேரி செய்தார். ரஸிகர்கள் எல்லோரும் ஆவலுடன் கேட்டிருப்பார்கள். எதிர்பார்த்தபடி, அது முதல்தரமாகவே யிருந்தது. அரிய ஞானத்தோடு அனுபவமும் படைத்தவர். நயமும், ரவைஜாதி இயல்பும் கொண்ட அவர் சாரீரத்தில் அபரிமித சாதகமும் சேர்ந்துவிட்டால், அது நினைத்தபடியெல்லாம் உதவுவதற்குக் கேட்கவேண்டுமா? அவருக்கு இயற்கையான வேககால பிர்க்காப் பொழிவு, ஞானபாவக் கற்பனை வேலைப்பாடுகள் இவையுடன் ராகங்களில் விரிவான பிளானும், நிதானமும், வளைவு குழைவுகளில் அழுத்தமும் கூடக் கலந்து, பழுப்பு ஏறியிருக்கிறதென்றால், அவர் பாட்டின் இப்போதைய 'பத்தர்' முன்னதைவிட அழகாயிருப்பதில் ஆச்சரியமில்லை. அன்று அவர் வழங்கிய மோஹனம், சாவேரி ராகங்களே அத்தாக்ஷி. உருப்படிகளைக் கையாளும் விதரணையும் ஸ்வரம் பாடுவதின் சரளமும் வியக்கத் தக்கவை. விவரமறிந்த ரஸிகர்களின் அபிப்பிராயத்தை மதித்து, குறைகளை நீக்கி, கலையை மேம்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அவரிடமிருப்பது பாராட்டத்தக்கது.

பாருப்பள்ளி ராமகிருஷ்ணய்ய பந்துலு 16உ. சென்னை நிலையத்தில் செய்த கச்சேரி பல அம்சங்களில் சிகரமாய் விளங்கியது. அவர் குரல் ரேடியோவில் கனமும் கனிப்பு முன்னதாகவே கேட்டது. வேககால பிர்க்காவில்கூடத் தேசலற்ற தெளிவு நாதம்; ராகஸ்வரூபங்களை ஸ்படிகம்போல் விளக்கும் அழகிய அடுக்கு சஞ்சாரங்கள்; ஞானச் சிறப்புடன் பாடுவதை யெல்லாம் ரஞ்சிக்க வைக்கும் லக்ஷணப் பொருத்தம்; வேறென்ன வேண்டும்? சௌராஷ்டிரம், தோடி, கல்யாணி ராகங்கள் மிகவனப்பாயிலங்கின. உருப்படிகளில் சாஹித்ய சுத்தமும், பாவப் பொழிவும் தென்பட்டன. முகாரி ராகம் ஒரே அழுகையாய் இருக்க வேண்டுவதில்லை, அழகாயுமிருக்கலாம் என்பதைக் காட்டினார்.

தனிப் பெருமை கொண்ட ஸீனியர் வித்வானின் பெரிய கச்சேரி யமைந்ததில் திருச்சி நிலையமும் பின்வாங்கவில்லை. 18உ. அங்கிருந்து கேட்ட முடிகொண்டான் வெங்கடராமய்யரின் கச்சேரி இத்தடவை அமோகமாயிருந்தது. அவரிடம் முன் குறிப்பிட்ட குறைகள்கூட நீங்கி விட்டதுபோல் தோன்றியது. ஸ்ரீ நிகேதனையுடன் ஆரம்பித்தார். தற்காலம் அபூர்வம் போல் தென்படும் வஸந்தா ராகத்தைப் பிரமை தட்டும்படி அலசி யெடுத்தார். வாசஸ்பதியில் தன் திறமை முழுவதையும் காட்டி அனுபவித்து உருக்கமாய்ப் பாடினார். 'ஸ்ரீகாமாக்ஷி' 'பாஹி ஜகஜ்ஜனனி' உருப்படிகளில் நிரவல் ஸ்வரங்கள் மழைபோல் பெய்தன. கடைசியில் தனக்கு ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் நல்ல பரிசயம் உண்டு என்பதைப் பீம்பளாஸ் ராகத்தை விஸ்தாரமாய்ப் பாடி நிரூபித்தார்.

சென்ற இரண்டு வாரங்களில் உயர்தர ஞானபாவக் கச்சேரிகளில் 19உ. சென்னையில் வாசித்த வி. துரைசாமி அய்யங்காரின் வீணையைக் குறிப்பிடலாம். இவர் வாசிப்பு மத்யமகால வேலைப்பாடுகளில் தான் விருவிருப்புடன் நன்கு சோபிக்கிறது. மீட்டு சுகமாயிருந்தது. ராகஸ்வரூபங்களை எளிதில் விளக்கும்படி வாத்யத்தைக் கையாண்டார். பூர்வி கல்யாணியும் கேதார கௌளையும் முதல் ஸ்தானத்துக்குப் போட்டியிட்டன. கமகப் பொழிவையும் சற்று கவனிப்பாராகில் இன்னும் அவர்கலை சோபிக்கும்.

25உ. திருச்சியிலிருந்து இன்னுமோர் உயர்தரக் கச்சேரி கேட்டது. அங்கே பாடிய மன்னார்குடி ராஜகோபால பிள்ளை மதிப்பு வாய்ந்த ஸீனியர் வித்வான்களில் ஒருவர். சாரீர நயத்துடன் ஞானச் சிறப்பும் கொண்டவர். அன்று அவர் எடுத்துக்கொண்ட காம்போதி, தேவமனோஹரி, தோடி ராகங்களும் திருப்புகழுக்கு முன் பாடிய ராகமாலிகையும் பாணியழகுடன் வனப்பாயிலங்கின. மாலிகையில் பைரவி உருக்கமாயிருந்தது. 'ஸமயமிதே' 'கோருவமரகத' உருப்படிகளில் ஸ்வரம் ஜோராயிருந்தது.

* * *

13உ. திருச்சியில் நாகர் கோவில் மகாதேவன் நயமான குரலில் தர்பார், கல்யாணி ராகங்களையும் உருப்படிகளையும் சுருதி சுத்தமாயும் நிதானமாயும் வழங்கினார். எல்லாவற்றிலும் பெரிய 'பிளான்' போட்டுப் பாடினார். இவருக்குள்ள திறமையில் இன்னும் ராகங்களை அதிகமாகப் பாடியிருக்கலாம்.


அன்று சென்னையில் பாடிய கே. கோமதி தேவிக்கு இனிமையான குரல். கல்யாணி ஆலாபனையும் காம்போதி உருப்படியின் நிரவல் ஸ்வரங்களும் தேர்ந்தியாயிருந்தன.

14உ. சென்னை நிலையக் கச்சேரிகளில் பழனி ஆர். பாகீரதியினது குறிப்பிடத் தக்கது. சங்கராபரணம், பூர்வி கல்யாணி, பைரவி ராகங்கள் அழகாயிருந்தன. மேலே பாடும் போது சிறிது சிரமப்பட்டார்.

15உ. சென்னையில் கேட்ட ருக்மிணி கிருஷ்ணன், என். பாலசுப்ரமணியன் இவர்களின் பாட்டும் திருச்சியில் வி. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் நாகஸ்வரமும் கவனத்தை யிழுத்தன. முதல்வரிடம் அடாணா, வாசஸ்பதி, காம்போதி ராகங்கள் இனிமையாயிருந்தன. ஆனால் நடு நடுவே தேசல் விழுந்தது. இரண்டாமவரது ஸிம்மேந்திர மத்யமும் கல்யாணியும் ஜோராயிருந்தன. மூன்றாமவரின் நாகஸ்வரத்தில் ஹிந்தோளம் குளிர்ச்சியாயிருந்தது.

16உ. திருச்சியில் காஞ்சீவரம் எம். என். வெங்கடவரத பிள்ளை, மோஹனம், ஸிம்மேந்திர மத்யமம், கானடா, கரஹரப்ரியா வென்று ராகங்களை வன்மையாய்ப் பொழிந்தார்.

17உ. திருச்சியில் சாந்தாபாய் மாதவராவும் சென்னையில் பஞ்சநாதனும் செய்த கச்சேரிகள் உயர்ந்த ரகமாயிருந்தன. முன்னவருக்கு மெல்லிய குரல்போதாலும் ஆனால் இனிமையும் உதவுபடியும் கொண்டது. ஆரபி, ஸிம்மேந்திர மத்யம ராகங்களைத் திறமையாய்க் கையாண்டார்.



கவிஞர் பள்ளிக்கூடத்தில் படித்தபோது, அவருக்குக் கணக்குப் பாடம் வருவதில்லை. எனவே, ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களின்மீது பழி வாங்க அந்த எண்களைக் கொண்டே இந்தச் சித்திரம் வரைந்தார். இங்கிலாந்தில் நடந்த சித்திரப் போட்டியில் இதற்கு ஏழு கினி பரிசு கொடுத்தார்களாம்.

ராமலிங்கம் கோயமுத்தூர் பிராஞ்ச் ஸ்கூலில் சேர்ந்த பிறகும் சித்திரப் பிரேமையினால் மெத்த துன்பம் அடைய நேர்ந்தது. கணக்கு வாத்தியார் எஸ். பி. ராமகிருஷ்ணய்யரை என்னமோ என்று நினைத்துக்கொண்டு அவரைப்போல் சித்திரம் போடப்பார்த்தால் அவர் சும்மா விட்டு விடுவாரா? "ஏண்டா லே, கணக்கிலே சுத்த சூன்யமாய் இருந்துண்டு, 'காரிகேச்சர்' (கேலிப் படம்) போட்டிருக்கிறாயா? என் மூக்கை இன்னும் கொஞ்சம் நீட்டிப் போடு கிறதுதானே? எங்கே, நீட்டு கையை!" என்றார். சித்திரம் போட்ட கைகள் ஒவ்வொன்றுக்கும் மூன்றடிகள் வீதம் கிடைத்தன. மூன்று நாள் கை வீங்கியிருந்தது!

ஆனாலும், சிரஞ்சீவி ராமலிங்கத்தின் சித்திரமோகம் விடவில்லை. கலாசாலை பிரின்சிபால் இ. ஹெச். எலியட் என்னும் இங்கிலீஷ்காரரைப்போல் ஒரு 'காரிகேச்சர்' போட்டார். அதைப்பார்த்த துரை சித்திரம் போட்ட கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, சட்டைப் பையிலிருந்த தங்கக் குழாயும் மூடியுமுள்ள பென்சிலை வெகுமதியாக அளித்தார். அதோடு, "ராமலிங்கம், உன்னை மிகவும் மெச்சுகிறேன். உன்னுடைய சித்திரம் மிகவும் நன்றாய் இருக்கிறது" என்றும் சொன்னார்.

ஸ்ரீ ராமலிங்கம் கலாசாலைக்குப் போனார். கலாசாலையில் சேர்ந்து எப். ஏ. படித்தார். அப்போது அவருக்குக் காது வலி வந்தது. காது வைத்தியம் செய்து கொள்வதற்காக சென்னையில் அப்போது பிரசித்தி பெற்று விளங்கிய டாக்டர் டி. எம். நாயரிடம் சென்றார். டாக்டர் நாயரின் வைத்தியத்தின் பலனாகக் காதுவலி நீங்கிற்று; ஆனால் காது அரைச் செவிடாகிவிட்டது!

ஸ்ரீ ராமலிங்கத்துக்கு உத்தியோகம் பண்ணிவைக்க அவருடைய தந்தை முயற்சி செய்தார். கடைசியில், நாமக்கல் தாலூகாக் கச்சேரியில் குமாஸ்தா வேலை கிடைத்தது. அங்கும் சித்திரப் பைத்தியம் புகுந்ததன் காரணமாக மூன்று மாசத்துக்கு மேல் வேலை பார்க்க முடியவில்லை. பிறகு, சித்திரத்தையே தொழிலாகக் கொண்டார் ஸ்ரீ ராமலிங்கம். சித்திர வித்தையைக் கைக் கொண்டிருந்த வரை காலக்ஷேபம் சரியாக நடந்து கொண்டிருந்தது. சித்திரத்தை விட்டு எப்போது கவிதை எழுதத் தொடங்கினாரோ, அப்போதே அவருடைய சங்கடங்கள் ஆரம்பமாயின. அந்தச் சங்கடங்கள் அவருக்கு உதவி செய்ய முன்வந்த நண்பர்களையும் பற்றத் தொடங்கின. அந்த நண்பர்களுக்குள்ளே ஸ்ரீ திருநாவுக்கரசு அவர்களின் கதை ரொம்பவும் நெஞ்சை உருக்குவது.

இவற்றையெல்லாம் "என் கதை" என்ற நாமக்கல் கவிஞரின் சுயசரிதத்தில் படித்து நேயர்கள் மகிழ்வார்களாக. அப்படி மகிழ்ந்த பிறகு, நாமக்கல் கவிஞர் நிதிக்குத் தங்கள் தங்கள் காணிக்கையைக் கொஞ்சம் துரிதமாகவே அனுப்பி வைப்பார்களாக.

* * *

"என் கதை" என்ற புத்தகத்தைப் படித்தவுடன், சாதாரணமாக நமக்குத் தோன்றுவது என்னவென்றால் நாமக்கல் கவிஞர், கவிஞராகிவிட்ட காரணத்தினால் தமிழ் வசனம் வெகுவாக நஷ்டமடைந்து விட்டது என்பதுதான். இந்தப் புத்தகத்திலுள்ள தமிழ்தான் உண்மையான செந்தமிழ். ஏனெனில், இந்தத் தமிழ்தான் தமிழ் நாட்டு மக்களின் நாவில் உலாவும் தமிழ். இந்தப் புத்தகம் நாமக்கல் கவிஞரின் சொந்தக் கதை மட்டுமல்ல; தற்காலத் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான பகுதி. "இது ஒரு கலைப் பொக்கிஷமாக வைத்துக் காப்பாற்றப் படவேண்டிய நூல்" என்று பிரசுரகர்த்தர்கள் உரிமை கொண்டாடுவதை நாம் மனப்பூர்வமாக அங்கீகரிக்கிறோம்.

என் கதை: நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்பு. பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை; விலை: ரூ. 6—8—0.

காலக்ஷேபம்

மொத்த வியாபாரம்

சாமான் வாங்குபவர்:—ஐயா, கடைக்காரரே, இந்தப் புளியிலே கொட்டையொன்றும் இராதே?

கடைக்காரர்:—நல்லாக் கேட்டீங்க, சாமி! நீங்க வேணும்னு கேட்டாக்கூடக் கிடையாதே! அதைத்தான் காப்பிக்கொட்டை வியாபாரி மொத்தமாய் வாங்கிக்கிட்டுப் போயிடறாரே! —வி. எச். எஸ். மணி.

★

நல்ல யோசனை!

போர்டு எழுதுகிறவர்:—வாங்க செட்டியாரே! போர்டு எழுதியாயிடுத்து! நீங்க சொன்ன மாதிரியே பூவேலை செய்து, 'ஜம்'னு எழுதியிருக்கிறேன்! இந்தப் பூ எழுத மூன்று ரூபாய் பெயிண்ட் ஆயிருக்குதுங்க! ஆகையினால் அந்த மூன்று ரூபாயையும் சேர்த்துக் கொடுத்துடுங்க.

செட்டியார்:—மூணு ரூபாயா? அடேயப்பா! ஒண்ணு செய்யுங்க! அந்தப் பூவை அழிச்சுடுங்க! வாணாம்!

—எஸ். எம். சுந்தரம்.

★

வேலையின் காரணம்

டாக்டர்:—பயப்படாதீர்கள், மிஸ்டர் சுந்தரம்! உங்களுக்கு வந்திருக்கும் இதே வியாதி எனக்கு முன்பு வந்திருந்தது. நான் இப்போது எப்படி இருக்கிறேன்?

நோயாளி:—இருக்கட்டும், ஐயா! ஆனால் உமக்கு இதே டாக்டரா வைத்தியம் செய்தார்? —எ. எம். நாராயணி.

★

வாய்ப் பாட்டு!

பெண்ணின் தகப்பனார்:—பெண்ணைப் பார்த்தீரோ இல்லையோ? நன்றாய்ப் படித்திருக்கிறாள். அவள் வாய்ப்பாட்டைக் கேட்க வேண்டும்.

நாகர்:—கேட்கலாம், எங்கே?

பெண்:—ஓர் இரண்டு இரண்டு, ஈரிரண்டு நாலு, மூவிரண்டு ஆறு......

—எஸ். எம். எஸ்.

புத்திசாலித்தனம்

ஒரு சிறு நகரத்தின் நகர சபை கூடி ஒரு புது ஆஸ்பத்திரி கட்டவேண்டும் என்று யோசனை செய்தது. ஆனால் நகர சபையைச் சேர்ந்த பணமோ சொற்பம். ஆதலால் வெகு நேரம் விவாதிக்கப்பட்டுக் கீழ்க்கண்டவாறு முன் யோசனையில்லாமல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புது ஆஸ்பத்திரி கட்டுவதற்குப் பழைய ஆஸ்பத்திரியை இடித்து அதிலுள்ள பொருள்களை வைத்தே கட்ட வேண்டும். புது ஆஸ்பத்திரி கட்டும்வரை பழைய ஆஸ்பத்திரியையே உபயோகித்துக் கொள்ள வேண்டும். —எல். பாண்டிப் பெருமாள்.

★

கணக்கு எப்படி?

"இந்தக் கோபுரம் கட்டி இப்போது சரியாக ஆயிரத்து எட்டு வருஷங்களும் ஆறு மாதமும் ஆகின்றன."

"அதென்ன ஐயா, அவ்வளவு கணக்காகச் சொல்கிறீர்?"


"நான் இந்த ஊருக்கு வந்தபோது இது கட்டி ஆயிரம் வருடங்கள் ஆனதாக ஜனங்கள் சொன்னார்கள். நான் வந்து எட்டு வருடமும் ஆறு மாதமும் ஆகின்றன. அதிலிருந்துதான் கணக்காகச் சொல்கிறேன்!" —டி. எஸ். சுப்புசாமி.

★

பெரியோர் வாக்கு

முதலாளி:—இப்போது என்னிடத்தில் வேலை ஒன்றுமில்லை. ஏன் தொந்தரவு பண்ணுகிறாய்?

வேலைக்கு வந்தவன் (முதலாளியின் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு):-



அப்படிச் சொல்லி விடாதீர்கள். நான் ரொம்ப ஏழை; பிள்ளைகுட்டிக்காரன்.......!

முதலாளி:—சட், காலை விடடா!

வேலைக்கு வந்தவன்:—காலை விடமாட்டேன்! "காரியமாகிறவரையில் கழுதையானாலும் காலைப்பிடி" என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்களே! —எஸ். ஜி. ராஜன்.

கைலையங்கிரியில்

நாடோடி

[கைலையங்கிரியில் பரமசிவன் பார்வதியுடன் வீற்றிருக்கிறார். அப்பொழுது தமிழ் நாட்டிலிருந்து ஏதோ கூக்குரல் கேட்கிறது.]

பரமசிவன்:—பார்வதி! அது என்ன திடீரென்று தமிழ் நாட்டிலிருந்து கூக்குரல் கேட்கிறது? சற்று உன் பேச்சை நிறுத்து. அது என்ன என்று கவனிக்கிறேன்.

ஒரு பையனின் கூக்குரல்:—ஈஸ்வரா! என்ன இருந்தாலும் உனக்கு இத்தனை பாரபட்சம் வேண்டாம். அடுத்த வீட்டுப் பையனைப் பரீட்சையில் பெயிலாக்கிய தாங்கள் என்னை மட்டும் ஏன் பரீட்சையில் தேற வைத்தீர்கள்? நானும் அவனைப்போல் பரீட்சையில் பெயிலாகியிருக்கக் கூடாதா? அத்தனைக்கும் அந்தப் பையன் எழுதிய பரீட்சை விடைகளைப் பார்த்துத்தானே நானும் விடை எழுதினேன்?

பரமசிவன்:— இது என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! பரீட்சையில் தேறியதற்காக அந்தப் பையன் இப்படி வருத்தப்பட்டுக் கொள்கிறானே! இதோ யாரோ ஒரு தகப்பனார் தம் பிள்ளையைக் கடிந்து கொள்வது கேட்கிறது. என்னவென்று கவனிக்கிறேன்.

ஒரு தகப்பனாரின் குரல்:— அயோக்கியப் பயலே! உன்னை யாரடா பரீட்சையில் தேறச் சொன்னது? நீ எப்படியடா பரீட்சையில் தேறலாம்? போன வருஷமே வெகு பேர் பட்ட திண்டாட்டத்தைப் பார்த்து விட்டு, 'பாடத்தைச் சரியாகப் படிக்காதேடா, பாடத்தைச் சரியாகப் படிக்காதேடா' என்று அடியாக அடித்துக் கொண்டேன். துளியாவது கேட்டாயா? வருஷம் முழுவதும் ஊர் சுற்றிக் கொண்டிருந்தவன் திடீரென்று பரீட்சை சமயத்தில் படித்துப் பரீட்சையில் தேறித் தொலைத்தாய். நான் இப்பொழுது திண்டாட வேண்டியிருக்கிறது!

பரமசிவன்:—இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது! பரீட்சையில் தேறியதற்காகப் பையனைப் பாராட்டுவதற்குப் பதில் இந்தத் தகப்பனார் இப்படி நொந்து கொள்கிறாரே! ஒன்றும் விஷயம் புரியவில்லையே! இதோ இங்கே ஒரு தாயார் தன் பெண்ணைக் கடிந்து கொள்வது கேட்கிறது. என்னவென்று கவனிக்கிறேன்.

ஒரு தாயாரின் குரல்:— எதற்காக இப்படிப் பரீட்சையில் பாஸ் பண்ணித் தொலைத்து விட்டு என் கழுத்தை அறுக்கிறாய்? 'கூடமாடக் காரியங்களுக்குக் கொஞ்சம் ஒத்தாசையாக இருடி' என்று கெஞ்சு, கெஞ்சு என்று கெஞ்சினேன். நீ கேட்டாயோ? எப்பொழுது பார்த்தாலும், புஸ்தகமும், கையுமாக விளங்கினாய். ஒரு துரும்பை எடுத்துக் கூட அப்பால் போடமாட்டாய். இப்பொழுது? பரீட்சையில் தேறித் தொலைத்து விட்டாய். நான் அவதிப்பட வேண்டியிருக்கிறது.

பரமசிவன்:—இது என்ன, எனக்கு விஷயம் ஒன்றும் விளங்க வில்லையே!

பார்வதி:—அதோ நாரதர் வருகிறார். அவரைக் கேளுங்களேன்! அவர்தான் திரிலோக சஞ்சாரியாச்சே! அதிலும் கொஞ்ச காலமாகப் பூலோகத்தில் தானே அதிகமாக சஞ்சரித்து வருகிறார்.

[நாரதர் வருகிறார்.]

பரமசிவன்:—என்ன நாரதரே! திடீரென்று தமிழ் நாட்டினருக்கு என்ன வந்துவிட்டது? பரீட்சையில் தேறினதற்காகப் பையன்கள் தங்களை நொந்து கொள்கிறார்கள். பெற்றோர்கள் அவர்களைக் கடிந்து கொள்கிறார்கள். தமிழ் நாட்டினருக்குத் திடீரென்று பயித்தியம், கியித்தியம் பிடித்து விட்டதா, என்ன?

நாரதர்:—தமிழ் நாட்டினருக்கா? பயித்தியமா? சரியாய்ப் போச்சு! அவர்கள் நம்மைப் பயித்தியமாக அடிக்காமல் இருந்தால் போதாதா? அவர்கள் நம்மையெல்லாம் விதம் விதமாக வைத்துப் பிடிக்கும் சினிமாப் படங்களைப் பார்த்தால் நமக்குத்தான் பயித்தியம் பிடிக்கும்.

பரமசிவன்:—பின் எதற்காக இப்படிக் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்?

நாரதர்:—எல்லாம் காரணமாகத்தான் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அரசியல் நெருக்கடி, பஸ் நெருக்கடி, டிராம் நெருக்கடி, ரயில் நெருக்கடி ஆகிய இந்த நெருக்கடிகள் போதாது என்று இன்னொரு புது நெருக்கடியும் ஏற்பட்டால் யாருக்குத்தான் கோபமாக இராது?

பரமசிவன்:—அது என்ன புதிய நெருக்கடி?

நாரதர்:—எல்லாம் இந்தக் காலேஜ் நெருக்கடிதான். இந்த வருஷம்

காலக்ஷேபம்

மொத்த வியாபாரம்

சாமான் வாங்குபவர் :—ஐயா, கடைக்காரரே, இந்தப் புளியிலே கொட்டையொன்றும் இராதே?

கடைக்காரர்:—நல்லாக் கேட்டீங்க, சாமி! நீங்க வேணும்னு கேட்டாக்கூடக் கிடையாதே! அதைத்தான் காப்பிக்கொட்டை வியாபாரி மொத்தமாய் வாங்கிகிட்டுப் போயிடறாரே! —வி. எச். எஸ். மணி.

★

நல்ல யோசனை!

போர்டு எழுதுகிறவர் :—வாங்க செட்டியாரே! போர்டு எழுதியாயிடுத்து! நீங்க சொன்ன மாதிரியே பூவேலை செய்து, 'ஐம்'னு எழுதியிருக்கிறேன்! இந்தப் பூ எழுத மூன்று ரூபாய் பெயின்ட் ஆயிருக்குதுங்க! ஆகையினால் அந்த மூன்று ரூபாயையும் சேர்த்துக் கொடுத்துடுங்க.

செட்டியார் :—மூணு ரூபாயா? அடேயப்பா! ஒண்ணு செய்யுங்க! அந்தப் பூவை அழிச்சுடுங்க! வாணாம்!

—எஸ். எம். சுந்தரம்.

★

வேலையின் காரணம்

டாக்டர் :—பயப்படாதீர்கள், மிஸ்டர் சுந்தரம்! உங்களுக்கு வந்திருக்கும் இதே வியாதி எனக்கு முன்பு வந்திருந்தது. நான் இப்போது எப்படி இருக்கிறேன்?

நோயாளி :—இருக்கட்டும், ஐயா! ஆனால் உமக்கு இதே டாக்டரா வைத்தியம் செய்தார்? —எ. எம். நாராயணி.

★

வாய்ப் பாட்டு!

பெண்ணின் தகப்பனர் :—பெண்ணைப் பார்த்தீரோ இல்லையோ? நன்றாய்ப் படித்திருக்கிறாள். அவள் வாய்ப்பாட்டைக் கேட்க வேண்டும்.

நாதர் :—கேட்கலாம், எங்கே?.

பெண் :—ஓர் இரண்டு இரண்டு, ஈரிரண்டு நாலு, மூவிரண்டு ஆறு......

—எஸ். எம். எஸ்.

புத்திசாலித்தனம்

ஒரு சிறு நகரத்தின் நகர சபை கூடி ஒரு புது ஆஸ்பத்திரி கட்டவேண்டும் என்று யோசனை செய்தது. ஆனால் நகர சபையைச் சேர்ந்த பணமோ சொற்பம். ஆதலால் வெகு நேரம் விவாதிக்கப்பட்டுக் கீழ்க்கண்டவாறு முன் யோசனையில்லாமல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புது ஆஸ்பத்திரி கட்டுவதற்குப் பழைய ஆஸ்பத்திரியை இடித்து அதிலுள்ள பொருள்களை வைத்தே கட்ட வேண்டும். புது ஆஸ்பத்திரி கட்டும்வரை பழைய ஆஸ்பத்திரியையே உபயோகித்துக் கொள்ள வேண்டும். —எல். பாண்டிப் பெருமாள்.

★

கணக்கு எப்படி?

"இந்தக் கோபுரம் கட்டி இப்போது சரியாக ஆயிரத்து எட்டு வருஷங்களும் ஆறு மாதமும் ஆகின்றன."

"அதென்ன ஐயா, அவ்வளவு கணக்காகச் சொல்கிறீர்?"


"நான் இந்த ஊருக்கு வந்தபோது இது கட்டி ஆயிரம் வருடங்கள் ஆனதாக ஜனங்கள் சொன்னார்கள். நான் வந்து எட்டு வருடமும் ஆறு மாதமும் ஆகின்றன. அதிலிருந்துதான் கணக்காகச் சொல்கிறேன்!" —டி. எஸ். சுப்புசாமி.

★

பெரியோர் வாக்கு

முதலாளி :—இப்போது என்னிடத்தில் வேலை ஒன்றுமில்லை. ஏன் தொந்தரவு பண்ணுகிறாய்?

வேலைக்கு வந்தவன் (முதலாளியின் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு):-



அப்படிச் சொல்லி விடாதீர்கள். நான் ரொம்ப ஏழை; பிள்ளைகுட்டிக்காரன்.......!

முதலாளி :—சீ, காலை விடடா!

வேலைக்கு வந்தவன் :—காலை விடமாட்டேன்! "காரியமாகிறவரையில் கழுதையானாலும் காலைப்பிடி" என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்களே! —எஸ். ஜி. ராஜன்.

கைலையங்கிரியில்

நாடோடி

[கைலையங்கிரியில் பரமசிவன் பார்வதியுடன் வீற்றிருக்கிறார். அப்பொழுது தமிழ் நாட்டிலிருந்து ஏதோ கூக்குரல் கேட்கிறது.]

பரமசிவன்:—பார்வதி! அது என்ன திடீரென்று தமிழ் நாட்டிலிருந்து கூக்குரல் கேட்கிறது? சற்று உன் பேச்சை நிறுத்து. அது என்ன என்று கவனிக்கிறேன்.

ஒரு பையனின் கூக்குரல்:—ஈஸ்வரா! என்ன இருந்தாலும் உனக்கு இத்தனை பாரபட்சம் வேண்டாம். அடுத்த வீட்டுப் பையனைப் பரீட்சையில் பெயிலாக்கிய தாங்கள் என்னை மட்டும் ஏன் பரீட்சையில் தேற வைத்தீர்கள்? நானும் அவனைப்போல் பரீட்சையில் பெயிலாகியிருக்கக் கூடாதா? அத்தனைக்கும் அந்தப் பையன் எழுதிய பரீட்சை விடைகளைப் பார்த்துத்தானே நானும் விடை எழுதினேன்?

பரமசிவன்:— இது என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! பரீட்சையில் தேறியதற்காக அந்தப் பையன் இப்படி வருத்தப்பட்டுக் கொள்கிறானே! இதோ யாரோ ஒரு தகப்பனார் தம் பிள்ளையைக் கடிந்து கொள்வது கேட்கிறது. என்னவென்று கவனிக்கிறேன்.

ஒரு தகப்பனாரின் குரல்:— அயோக்கியப் பயலே! உன்னை யாரடா பரீட்சையில் தேறச் சொன்னது? நீ எப்படியடா பரீட்சையில் தேறலாம்? போன வருஷமே வெகு பேர் பட்ட திண்டாட்டத்தைப் பார்த்து விட்டு, 'பாடத்தைச் சரியாகப் படிக்காதேடா, பாடத்தைச் சரியாகப் படிக்காதேடா' என்று அடியாக அடித்துக் கொண்டேன். துளியாவது கேட்டாயா? வருஷம் முழுவதும் ஊர் சுற்றிக் கொண்டிருந்தவன் திடீரென்று பரீட்சை சமயத்தில் படித்துப் பரீட்சையில் தேறித் தொலைத்தாய். நான் இப்பொழுது திண்டாட வேண்டியிருக்கிறது!

பரமசிவன்:—இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது! பரீட்சையில் தேறியதற்காகப் பையனைப் பாராட்டுவதற்குப் பதில் இந்தத் தகப்பனார் இப்படி நொந்து கொள்கிறாரே! ஒன்றும் விஷயம் புரியவில்லையே! இதோ இங்கே ஒரு தாயார் தன் பெண்ணைக் கடிந்து கொள்வது கேட்கிறது. என்னவென்று கவனிக்கிறேன்.

ஒரு தாயாரின் குரல்:— எதற்காக இப்படிப் பரீட்சையில் பாஸ் பண்ணித் தொலைத்து விட்டு என் கழுத்தை அறுக்கிறாய்? 'கூடமாடக் காரியங்களுக்குக் கொஞ்சம் ஒத்தாசையாக இருடி' என்று கெஞ்சு, கெஞ்சு என்று கெஞ்சினேன். நீ கேட்டாயோ? எப்பொழுது பார்த்தாலும், புஸ்தகமும், கையுமாக விளங்கினாய். ஒரு துரும்பை எடுத்துக் கூட அப்பால் போடமாட்டாய். இப்பொழுது? பரீட்சையில் தேறித் தொலைத்து விட்டாய். நான் அவதிப்பட வேண்டியிருக்கிறது.

பரமசிவன்:—இது என்ன, எனக்கு விஷயம் ஒன்றும் விளங்க வில்லையே!

பார்வதி:—அதோ நாரதர் வருகிறார். அவரைக் கேளுங்களேன்! அவர் தான் திரிலோக சஞ்சாரியாச்சே! அதிலும் கொஞ்ச காலமாகப் பூலோகத்தில் தானே அதிகமாக சஞ்சரித்து வருகிறார்.

[நாரதர் வருகிறார்.]

பரமசிவன்:—என்ன நாரதரே! திடீரென்று தமிழ் நாட்டினருக்கு என்ன வந்துவிட்டது? பரீட்சையில் தேறினதற்காகப் பையன்கள் தங்களை நொந்து கொள்கிறார்கள். பெற்றோர்கள் அவர்களைக் கடிந்து கொள்கிறார்கள். தமிழ் நாட்டினருக்குத் திடீரென்று பயித்தியம், கியித்தியம் பிடித்து விட்டதா, என்ன?

நாரதர்:—தமிழ் நாட்டினருக்கா? பயித்தியமா? சரியாய்ப் போச்சு! அவர்கள் நம்மைப் பயித்தியமாக அடிக்காமல் இருந்தால் போதாதா? அவர்கள் நம்மையெல்லாம் விதம் விதமாக வைத்துப் பிடிக்கும் சினிமாப் படங்களைப் பார்த்தால் நமக்குத்தான் பயித்தியம் பிடிக்கும்.

பரமசிவன்:—பின் எதற்காக இப்படிக் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்?

நாரதர்:—எல்லாம் காரணமாகத்தான் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அரிசியல் நெருக்கடி, பஸ் நெருக்கடி, டிராம் நெருக்கடி, ரயில் நெருக்கடி ஆகிய இந்த நெருக்கடிகள் போதாது என்று இன்னொரு புது நெருக்கடியும் ஏற்பட்டால் யாருக்குத்தான் கோபமாக இராது?

பரமசிவன்:—அது என்ன புதிய நெருக்கடி?

நாரதர்:—எல்லாம் இந்தக் காலேஜ் நெருக்கடிதான். இந்த வருஷம்

எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் ஏகத்தாராக மாணவர்கள் தேறி விட்டனர். தேறின அத்தனை மாணவர்களும் ஆண், பெண் அடங்கலாக, கல்லூரியில் சேர விரும்புகின்றனர். எல்லாரையும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளும்படி அந்த நாட்டுக் கல்லூரிகளில் இடம் இல்லை. ஆகவே பிரின்ஸ்பாலின் காலைப் பிடித்துக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூட நிர்வாகஸ்தர்களின் பேட்டிக்காகக் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. பிரின்ஸ்பாலுக்கு வேண்டியவர்களைப் போய்ப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு கல்லூரியாகப் போய்ப் பழிகிடக்க வேண்டியிருக்கிறது. காரியாலயத்துக்குத் தலைவலி என்றோ, வயிற்று வலி என்றோ பொய் சொல்லித் தொலைக்க வேண்டியிருக்கிறது. பையன்களையும், பெண்களையும் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக இத்தனை அவதிப்பட வேண்டியிருக்கிறதென்றால் கோபமாகத்தானே வரும்?

பரமசிவன் :— ஐயோ, பாவம்! ஆமாம், கல்லூரிகளில் மட்டும் தானே இந்த இட நெருக்கடி?

நாரதர் :—அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்! சின்னச் சின்ன வகுப்புகளுக்குக் கூட இப்பொழுது கிராக்கி வந்துவிட்டது. நாலாவது, ஐந்தாவது வகுப்புகளில் சேர்ப்பதற்குக்கூட ஹைகோர்ட் ஜட்ஜுகளின் தயவை நாடிப் போக வேண்டியிருக்கிறது. ஜனங்கள் அவர்கள் தயவை நாடிப்போகும் சமயம் தான் அவர்கள் தங்கள் பிள்ளைகளை மூன்றாவது வகுப்பிலோ, நான்காவது வகுப்பிலோ சேர்ப்பதற்காகப் பள்ளிக்கூடத்து டிரஸ்ட் போர்ட் அதிகாரிகளின் தயவை நாடிப் போய் விடுகிறார்கள்!

பரமசிவன் :—ஐயோ! அப்படியா?

நாரதர் :— இதில் இன்னொரு வேடிக்கை கேட்டீர்களா? முன்பெல்லாம் பள்ளிக்கூடம் போகாமல் சண்டித்தனம் பிடித்த பிள்ளைகள் எல்லாம் இப்பொழுது 'என்னை ஏன் இன்னும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கவில்லை?' என்று தகப்பனுடன் சண்டை பிடிக்கத் தொடங்கி விட்டனர். தகப்பனார் என்ன தலை கீழாக நின்றாலும் பள்ளிக்கூடத்தில் இடம் கிடைக்காது என்று அவர்களுக்குத் தெரியும்.

பரமசிவன் :— (சிரித்துக்கொண்டே) சின்னப் பசங்களுக்கு இத்தனை துணிச்சலா? ஆமாம், புதுப் புதுக் கல்லூரிகளும், புதுப் புதுப் பள்ளிக்கூடங்களும் தோன்றினால்தானே கல்வி அபிவிருத்தி அதிகமாகும்? ஜனங்களுக்கும் க்ஷேமம் உண்டு.

நாரதர் :—ஆமாம், தாங்கள் சொல்வது சரிதான்.

பரமசிவன் :—அப்படியானால் புதுப் புது கல்லூரிகள் தோன்றுவதற்கு நான் வேண்டுமானால் ஏதாவது ஏற்பாடு செய்யட்டுமா? அன்று தில்லை அந்தணர்கள் கனவில் போய்த் தோன்றினது போல் காலேஜ் பிரின்ஸ்பால்களின் கனவில் போய்த் தோன்றட்டுமா?

நாரதர் :—அப்படிச் செய்தால் நல்லதுதான். ஆனால் இது தங்களால் முடியாதே?

பரமசிவன்:—என்ன, என்னால் முடியாத காரியமும் ஒன்று இருக்கிறதா?

நாரதர்:—ஆம். இருக்கிறது. இந்தக் காரியம் தங்களால் முடியவே முடியாது.

பரமசிவன்:—ஏன்?

நாரதர் :—அந்தக் காலேஜ் பிரின்ஸ்பால்கள் தூங்கினால்தானே கனவு காண்பார்கள்? தாங்களும் அவர்கள் கனவில் தோன்ற முடியும்? அவர்கள் தான் இந்த நிலைமையைக் குறித்துத் தூக்கமில்லாமல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே?

பரமசிவன் :—பின் என்ன தான் பண்ணுவதாம்?

நாரதர் :—அதற்குத்தான் நான் தங்களை நாடி வந்தேன். இதோ பக்கத்து சிம்லா மலையில் தேசத் தலைவர்கள் எல்லாம் வைஸ்ராயுடன் மகாநாடு கூடிப் பேசிக் கொண்டிருப்பது தெரிகிறதா?

பரமசிவன் :—தெரிகிறது.

நாரதர் :—அந்த மகாநாடு வெற்றிகரமாக முடிய வேண்டும் என்று தாங்கள் கிருபை புரிந்தால் போதும். தேசத் தலைவர்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்புக் கொண்டதும் எல்லா நெருக்கடிகளும் தன்னைப் போல் தீர்ந்து விடும்.

பரமசிவன்:—அப்படியே சரி. கிருபை புரிகிறோம். ஆனால் நாரதரே! இதற்கு என் கிருபை மட்டும் இருந்தால் போதாதே!

நாரதர்:—பின் வேறு என்ன வேண்டும்?

பரமசிவன்:— தங்கள் கலகமும் இல்லாமல் இருக்க வேண்டுமே?

நாரதர்:—அதைப் பற்றித் தாங்கள் கவலைப்படாதீர்கள். இப்பொழுது எனக்குத் தேவலோகத்தில் நிறைய வேலை இருக்கிறது. ஆகவே, பூலோகத்துக்குப் போக மாட்டேன்.

[நாரதர் மறைகிறார்.]


சுயமாக வெளுக்கும் நுரையைப்பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக் கிறீர்களா?

ஸ்ரீ ஜகதீஷ் பிலிம்ஸின்

மகோன்னத கற்பனைச் சித்திரம்!

லவங்கி

அல்லது

ஜகன்னாத பண்டித ராஜன்

— தமிழில் —

★

விஞ்சமூரி வரதராஜன், பி. ஏ. (சங்கீத டிப்ளமா)
குமாரி ருக்மணி, ஒய். வி. ராவ், ஜெயம்மா,
கே. சாரங்கபாணி, ஜெயகௌரி, டி. ஆர்.
ராமச்சந்திரன், ரங்கஸ்வாமி, நடேசய்யர்

மற்றும் பலர் நடிப்பது

★

இந்தியாவின் இணையற்ற ஸம்ஸ்கிருத மகா கவியின் வாழ்க்கையும், ஷாஜஹான் சமஸ்தான அற்புதங்களும், முகலாய அந்தப்புர லீலா விநோதங்களும் நிறைந்தது

★

டைரக்ஷன் : ஒய். வி. ராவ் :: இப்பொழுது நியூடோனில் தயாராகிறது

புக்கிங்குகளுக்கு

ஸ்ரீ ஜகதீஷ் பிலிம்ஸ்

கீழ்ப்பாக்கம் :: மதராஸ்



குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
நான் களைப்படையாமல் இருக்கிறேன்!
விநோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.
உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!
VINOLIA WHITE ROSE SOAP
விநோலியா
ஒயிட் ரோஸ் ஸோப்பு
VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND



'தாய் சொல் மிக்க வாசகமில்லை'
லோத்ரா
கர்ப்பாசயரோக நிவாரணி
கேசரி குடீரம் லிமிடெட், மதராஸ்
தமிழ்நாடு, ஆந்திர ஜில்லாக்கள், நிஜாம் சமஸ்தானங்களுக்கு ஏஜண்டுகள் :
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்,
செகிந்தராபாத் : பெஜவாடா : மதுரை.



உத்திரவாதமுள்ள ஆபரணங்களுக்கும் வைரங்களுக்கும்
அசல் வெள்ளி சாமானகளுக்கும்
PAR
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
கடை வீதி, "ஸ்வர்ண மாளிகை" கோயமுத்தூர்.
தந்தி. "ராஜா"...... தபால் பெட்டி. 139. ....போன். 218.A



நல்ல உயர்ந்த பண்டங்களையே விரும்புவோருக்கு

நமக்குக் கட்டாவிடினும் நம்மில் எல்லோரும் மேன்மையான பண்டங்களையே விரும்புகிறோம். சிகரெட்டில் சிறந்த புகையிலையை உபயோகித்தால்தான் அது விரும்பிப் பலராலும் சிறந்ததென்று சொல்லப்படும். டிலக்ஸ் டெனர் சிகரெட் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. பலரும் வாங்கி ஆனந்தமாக அனுபவிக்கலாம். உத்தரவாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலைகளாலேதான் டிலக்ஸ் டெனர் சிகரெட்டுகள் செய்யப்படுகின்றன.

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

tenor

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON.

கல்கி



KALKI ஜூலை 1, 1945 4 அணா

தன்னுடைய சொந்த மனைவியையே பந்தயமாக
வைத்துச் சூதாடிய தருமபுத்திர மகாராஜாவின்
செய்கையெல்லாம் நன்மையாகவே முடிந்தது!



எப்படி?

★

நியூ ஹன்ஸ்

தயாரித்த

அதி அற்புத

உணர்ச்சி மிகுந்த

புராணச் சித்திரம்

திரௌபதி

என்னும் படத்தில் கண்டுகளியுங்கள்.

★

சுசிலா ராணி, சந்திர மோகன், மஸார் கான்,
டேவிட், தீக்ஷித், ராம்கோபால்

முதலியோர் நடிப்பது

தயாரிப்பு, டைரக்ஷன்: **பாபுராவ் படேல்**

இப்பொழுது நான்காவது
மகத்தான வாரம்!

பிரபாத் - பெங்களூர்

அடுத்த படமாக
எதிர்பாருங்கள்!

ஸ்டார் - சென்னை

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press. 116-119. Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.